பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTER NET மூலம்
குறைந்த கட்டணத்தில் தொடர்புகொள்ள
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில் துரித தபால்/பொதிகள் சேவை
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
303, K.K.S. ROAD, JAFFNA
T.P : 021-2222670, 2223588
FAX: 2223214
Email-del-smskr@eureka.lk

வலம்புரி

The Valampuri

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | ஆடி 10 | சனிக்கிழமை | (26.07.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 219

# குரங்குப்பாஞ்சான் முகாமை அகற்றப் புலிகள் மறுப்பு!

## கண்காணிப்புக்குழுத் தலைவர் அரசுக்கு உத்தியோக பூர்வமாக அறிவிப்பு

(நமது நிருபர்)

திருகோணமலை கிண்ணியா குரங்குப்பாஞ்சான் குளத்தில் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகளால் அமைக்கப்பட்ட முகாமை அகற்றுமாறு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு கோரியிருந்தும், அதனை நிராகரித்து முகாமை அகற்றமறுத்தமை யுத்த நிறுத்த மீறல் ஆகுமென யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பேச்சாளர் அற்மஸ் பிரதஸ்ரபீக் தெரிவித்துள்ளார்.

கிண்ணியா குரங்குப் பாஞ்சான் குளப்பகுதியில் விடுதலைப் புலிகளினால் அமைக்கப்பட்ட முகாமை அகற்றுமாறு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு கோரியிருந்தும் அம் முகாமை அகற்றாமை குறித்து கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரெலிவ்சன் விடுதலைப புலிகளின் அரசியல் துறைப்

(10ம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி பொற்பதியில் இராணுவம் முகாம் அமைப்பு

### மக்கள் வீதி மறிப்புப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி பொற்பதிப் பகுதியில் இராணுவத்தினர் முகாம் அமைப்பதற்கு மேற்கொண்டுவரும் முயற்சிகளுக்கு எதிராக அப்பகுதி மக்கள் நேற்று முழுநாளும் வீதி மறிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். பொற்பதிப் பகுதியில் உள்ள மீனவர் குடியிருப்புக்களைச் சுற்றியே படையினர் முகாம் அமைக்கும் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

படையினரின் இந்த நடவடிக்கையினால் பொதுமக்கள் தமது அன்றாடக் கடமைகளில் பலத்த அசௌகரியங்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளது.

இதனால், படையினர் முகாம் அமைப்பதை உடனடியாக நிறுத்துமாறு கோரி அப்பகுதி மக்கள் நேற்றுக் காலை 10 மணி முதல் மாலைவரை வீதிமறிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்துடன் இவ்விடயம் சம்பந்தமாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கும் அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பை அடுத்து சம்பவ

(10ம் பக்கம் பார்க்க)

## திட்டவரைபை ஆராயாமல் கருத்துக்களைக் கூறிக்குழப்பாதீர்

### மங்கள சமரவீரவுக்கு ஜனாதிபதி எச்சரிக்கை

(கொழும்பு)

அரசாங்கத்தினால் விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகம் தொடர்பான திட்டவரைபு பற்றி நன்றாக ஆராயாமல் உணர்ச்சிவசப்பட்டுக் கருத்துக்களைக் கூறுவது பிரச்சினைகளைக் கிளறிவிடக் கூடியது

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பொது ஜன ஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீரவை எச்சரித்தார்.

கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் பேசிய பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர அரசினால் புலிகளுக்கு அனுப்பப்பட்ட இடைக்கால சபைத் திட்டவரைபு டொன் யுவான் தர்மபாலா செய்த துரோகதனத்திற்குக் குறைவானதல்ல எனத் தெரிவித்தார்.

இதன்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு எச்சரித்தார். இதேவேளை, முன்னாள் அமைச்சர் கிங்ஸ்லி விக்கிரமரட்ண குறுக்கிட்டு சிங்கள ஆணைக்குழுவின் அறிக்கையை குப்பைக் கூடைக்குள் போட்டபோது, உணர்ச்சிகள் எங்கே போயிருந்தன எனக் கேள்வியெழுப்பினார்.

அத்துடன், மேற்படி திட்டவரைபு தொடர்பான கட்சியின் நிலைப்பாடு

(10ம் பக்கம் பார்க்க)

## நோர்வே பௌத்த பிக்குகள் இலங்கைக்கு விஜயம்

(கொழும்பு)

நோர்வேயைச் சேர்ந்த பௌத்தமதத் தூதுக் குழுவினர் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர். இங்கு வந்துள்ள அவர்கள் பௌத்த மதத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள், மகாநாயக்க தேரர் போன்றோரைச் சந்திப்பதோடு வணக்கத்தற்குரிய பௌத்தமதத் தலங்களுக்கும் விஜயம் செய்துவருகின்றனர்.

அத்துடன், நோர்வே அரசினால் இலங்கையில் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகள் பற்றிய மகாநாயக்க தேரரினதும் ஏனையோரினதும் கருத்துக்களைக் கேட்டறிந்து வருகின்றனர்.

நோர்வே அரசாங்கம் இலங்கையில் சமாதான முயற்சிகளை மேற்கொள்ளும் நோக்கில் கத்தோலிக்க மதத்தைபபரப்ப முனைகிறது என்ற குற்றச்சாட்டை முற்றாக மறுத்த இத்தூதுக் குழுவினர் இலங்கையின் அழைப்பின் பேரில் இலங்கை அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கு மிடையில் நல்லெண்ணத்தைக் கட்டியெழுப்புவதே எமது அரசின்

(10ம் பக்கம் பார்க்க)

## புலி உறுப்பினர் இருவர் மட்டக்களப்பில் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனை வீதியில் நேற்றிரவு 9.00 மணியளவில் திடீர் சோதனையில் ஈடுபட்ட ஏறாவூர்ப் பொலிஸார் விடுதலைப் புலி உறுப்பினர் இருவரைக் கைதுசெய்து ஏறாவூர்ப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர். வாகனம் ஒன்றில் வந்த சதாசிவம் அமிர்மலிங்கம் (வயது 18), கிருஷ்ணபிள்ளை மதியழகன் (வயது 28) ஆகிய இரு புலி உறுப்பினர்களுமே கைது செய்யப்பட்டவர்களாவர்.

(ந)

## இடைக்காலசபை வரைபுடன் இலங்கை வெளியுறவுச் செயலர் இந்தியாவுக்கு அவசர பயணம்

(கொழும்பு)

இலங்கை வெளியுறவுச் செயலாளர் நிஹால் றொட்றிக்கோ அவசர அவசரமாக நேற்று இந்தியாவுக்குச் சென்றுள்ளார்.

இந்தியா சென்றுள்ள அவர் இந்திய அரசு வெளியுறவுச் செயலாளர் ஹன்வஸ் சிபிலை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இக் கலந்துரையாடலின் போது இரு நாடுகளுக்கிடையிலான பொருளாதார உறவுகள் இலங்கைக் கடற்பகுதியில் இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடித் தொழிலை மேற்கொள்வது தொடர்பான பிரச்சினைகள் மற்றும் இலங்கைத் தமிழ் அகதிகள் விவகாரம் ஆகியவை குறித்து விரிவான விவாதங்கள் நடைபெற்றதாக இந்திய வெளியுறவுச் செயலக அதிகாரி நவ்டேஸங்மா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மீன்பிடித் தொழிலாளர்களின் பிரச்சினைகள் மற்றும் இலங்கைக்கு இந்தியா வழங்கியுள்ள சுமார் 200 மில்லியன் அமெரிக்க டொலர் மற்றும் வரிகளற்ற வர்த்தக ஒப்பந்தம் பற்றியும் விவாதிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கை வெளியுறவுச் செயலாளர் நிஹால் றொட்றிக்கோவின் நேற்றைய இந்திய விஜயம் விடுதலைப் புலிகளிடம் கையளிக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக சபை யோசனைகளை இந்திய வெளியுறவுச் செயலகத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கும் நோக்குடன் இடம்பெற்றதாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வெளியுறவுச் செயலாளர் டொட்றிக்கோ நேற்று இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜஸ்வந்சிங்காவையும், இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் பிரிகேஷ் மிஸ்ராவையும் சந்தித்துப் பேசியுள்ளார். இதனைத் தொடர்ந்து இன்று தமிழ் நாட்டுக்கு அவர் விஜயம் செய்யவுள்ளார். (வ)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# எமது உரிமைகளை உலகறியச் செய்வது பத்திரிகைகளின் முக்கிய பொறுப்பு

## பத்திரிகையாளர் பயிலரங்கில் இளம்பரிதி உரை

(யாழ்ப்பாணம்)

உலக இனங்களுக்கு உள்ளது போன்று ஐ.நா.சாசனத்தில் குறிப்பிட்டவாறு எம்மை நாம் ஆளும் தலைவிதியை நிர்ணயிக்கும் உரிமையையே நாம் கேட்கின்றோம்.

எமது இந்த நிலைப்பாட்டை வெளிககொணரும் பொறுப்பு ஊடகங்களுக்கே உண்டு.இதில் இருந்து விலகிவிட முடியாது. என்று யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்துள்ளார்.

யாழ்.பல்கலைக் கழக ஊடக வளப் பயிற்சி மையமும், யுனெஸ்கோவும் இணைந்து நேற்று யாழ்.பல்கலைக் கழக புவியியல்துறை மண்டபத்தில் ஆரம்பித்த ஊடகவியலாளர்களுக்கான மூன்று நாள் பயிலரங்கில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய இளம்பரிதி மேலும் கூறுகையில்;

நாம் யாரிடமும் எதையும் புதிதாக கேட்கவிலலை.நாம் வைத்திருந்தவற்றையும் இழந்தவற்றையுமே கேட்கின்றோம். சிங்கள இனம் எம்மை அடக்கி ஆண்டதாக வரலாறு இல்லை. நாம் ஆண்ட இனம்.வன்முறைகளாலும், அடக்குமுறைகளாலும் பறித்தெடுக்கப்பட்ட எமது உரிமைகளையே தற்போது கேட்கிறோம்.

எம் இனத்தின் சுயாட்சி, பொருளாதாரம், சமூதாய மேம்பாடு போன்ற, பல்வேறு எதிர்பார்ப்புக்களுடன் நம் இனத்தின் அரசியல் அபிலாசைகளையும் உணர்வுகளையும் உலகிற்கு உணர்த்த ஊடகங்கள் முன்வர வேண்டும்.

எமது போராட்ட வரலாற்றில் நாம் குவித்த வெற்றிகளுக்குப் பின்னால் பத்திரிகைகள் உள்ளனவென்பதை மறந்துவிட்முடியாது.

எனவே எமது விடுதலைக்காகத் தொடர்ந்து உழைக்க வேண்டிய கடப்பாடு பத்திரிகைகளுக்கும் செய்தியாளர்களுக்கும் உண்டு என்றார்.

புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் பேராசிரியர் சிவச்சந்திரன் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் மற்றும் பத்திரிகையாளர்கள், குடாநாட்டுப் பத்திரிகையாசிரியர்கள் ஆகியோர் கருத்துரை வழங்கினர். (உ-4,16)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ். தேசிய கல்வி நிறுவகத்தினால் கல்வி டிப்ளோமா பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்பப்படிவங்களை சிரேஷ்ட விரிவுரையாளரிடம் இருந்து பெற்று அடுத்த மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு தேசிய கல்வி நிறுவக பிராந்திய இணைப்பாளர் திருமதி த.வில்வ்நாதன் கேட்டுள்ளார். (உ-18)

## விண்ணப்பம் கோரல்

(சில்லாலை)

தேசிய மறையாசிரியர் டிப்புளோமா கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதற்கான விண்ணப்ப முடிவுத்தினம் அடுத்த மாதம் 15 ஆம் திகதியாகும். (உ-58)

# தமிழ்த்தினப் போட்டி நடுவர்கள் பாரபட்சமாக செயற்படக் கூடாது

## ஆரம்ப விழாவில் இஸ்ஸதீன் உரை

(யாழ்ப்பாணம்)

இன்று ஆரம்பமாகின்ற மாகாண மட்ட தமிழ்த்தினப் போட்டிகளுக்கு நடுவர்களாக கடமையாற்றுகின்றவர்கள் நடுவு நிலைமை தவறாது நன்னெறி காத்து தமிழுக்குப் பெருமை சேர்க்கவேண்டும்

முதல் தடவையாக யாழ்ப்பாணத்தில் இடம்பெறுகின்ற வடக்கு கிழக்கு மாகாணமட்ட தமிழ்த் தினப் போட்டிகளின் ஆரம்ப வைபவம் நேற்று யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெற்ற போது சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய வடக்கு கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளரும் முன்னாள் மாகாண கல்விப் பணிப்பாளருமான ஐ.எம். இஸ்ஸதீன் இவ்வாறு குறிப்பிட்டார்.

வலயக் கல்விப்பணிப்பாளர்கள்,கோட்டக்கல்வி அதிகாரிகள், மற்றும் அதிபர்கள்,ஆசிரியர்கள், மாணவர்கள் மத்தியில் அவர் மேலும் உரை நிகழ்த்துகையில்

போட்டிகளுக்கான நடுவர்கள் பாரபட்சம் காட்டாது உறவினர்கள், தெரிந்தவர்கள் என்ற சலுகையின்றிச் செயற்படவேண்டும் என்றார்.

தொடர்ந்து, யாழ்.மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரை உரை நிகழ்த்தினார். (உ-7)

## சித்த மருத்துவ மாணவர்களின் போராட்டம் தொடர்கிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கைதடி சித்த மருத்துவத்துறை மாணவர்களின் கதவடைப்புப் போராட்டம் 18-வது நாளாக நேற்றும் இடம் பெற்றது.

கைதடி சித்த மருத்துவத்துறையைத் தனிப்பீடமாகத் தரமுயர்த்தும்படி கோரி நடாத்தப்படுகின்ற இப் போராட்டத்தின் காரணமாக மாணவர்களுக்கான விரிவுரைகள் இடம் பெறவில்லை.

இது இவ்விதமிருக்க, சித்த மருத்துவத்துறை மாணவர்களால் மேற்கொள்ளப்படுகின்ற போராட்டத்தினைக் கைவிட்டு விரிவுரைகளுக்குச் செல்லுமாறு துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் விடுத்த கோரிக்கையை சித்த மருத்துவத்துறை மாணவர்கள் நிராகரித்துள்ளதாகவும் தெரிய வருகின்றது. (த-16)








வடக்குக் கிழக்கு மாகாண தமிழ்த் தினப் போட்டிகளையொட்டி யாழ்ப்பாணப் பாடசாலைகள் விழாக் கோலம் பூண்டிருப்பதைப் படங்களில் காணலாம். படங்கள்:ஜெராட்

## கொக்குவில் முன் பள்ளி விளையாட்டுப் போட்டி

(இணுவில்)

கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்தினரால் நடாத்தப்படும் கொக்குவில் இந்து முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப3 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ந-3,96)

## கல்வி அதிகாரி கழுத்து நெரித்துக் கொலை

(கொழும்பு)

தெகியத்தை கண்டி கல்வி வலய நிர்வாக அதிகாரி கழுத்து நெரிததுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மதிய உணவு உண்பதற்காக வீடு சென்ற இவர் இனந்தெரியாத நபர்களினால் கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

மதிய உணவு உண்ணச் சென்ற இவர் மீண்டும் கடமைக்கு திரும்பாததை அடுத்து, அவரைத் தேடிச்சென்ற சக ஊழியர்கள் மேற்படி நபர் கொலை செய்யப்பட்டுக்கிடப்பதை கண்டு தெகியத்தை கண்டி பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்தனர்.


இக் கொலை தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (தி)


## பேருந்து கையளிப்பு


(யாழ்ப்பாணம்)

இரண்டாவது உலக இந்து மாநாட்டையொட்டி வடமராட்சிப் பாடசாலைகளின் தேவைகருதியும், இந்துமதப் பணிகளுக்குப் பயன்படுத்துவதற்கெனவும் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனால் வதிரி கரவெட்டி ஸ்ரீ பரமானந்த ஆச்சிரமத்திற்கு வழங்கிய பேருந்து உத்தியோக பூர்வமாகக கையளிக்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வடமராட்சிப் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், இந்து சமய அமைப்புக்கள், இந்து நிறுவன அங்கத்தவர்கள் அனைவரையும கலந்து கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (உ-8)





தமிழ்த் தேசிய வீரர்கள் தினத்தையொட்டி நேற்றையதினம் நல்லூர் ஆலயச் சூழலில் நடைபெற்ற 20-வது ஆண்டு நினைவு நிகழ்வில் அரசியல் பிரமுகர்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்துவதையும் திரு.சிவாஜிலிங்கம் (பா.உ) உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். படங்கள்:ஜெராட்

# சித்த மருத்துவத்துறை பிரிந்துசெல்ல இடமளிக்கப்படாது

# பகிஷ்கரிப்பைக் கைவிட்டு சகல பணிகளையும் ஆரம்பிக்குக!

## யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறையை நிறுவன அந்தஸ்த்துக்கு உயர்த்தும் போது அது வலுவான ஒரு சட்ட வரையறைக்கு உட்பட்டு தனது கல்வி சார் நடவடிக்கைகளை சிறப்பாகச் செய்யக்கூடிய அந்தஸ்த்துக்கு உயரும் வாய்ப்பு உண்டு. இதற்கு மாறாக இச்செயற்பாடு இத்துறையை யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து பிரிந்து செல்ல வழிவகுக்கும் என்ற பீதி ஏற்றுக்கொள்ள முடியாதது.

நாம் எடுக்கும் நடவடிக்கைகள் இப்பிரிவு தொடர்ந்தும் யாழ். பல்கலைக்கழகத்துடன் இருப்பதை உறுதி செய்யுமே தவிர ஒரு போதும் பிரிந்து செல்ல இடமளிக்க மாட்டாது. இந்தஉறுதி மொழியை மூதவை மற்றும் பேரவையின் சார்பாக நான் உறுதியாகக் கூறுகின்றேன்.

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறையை பீடமாக்கும்படி கோரி அத்துறை மாணவர்கள் கடந்த 8ஆம் திகதி முதல் பகிஷ்கரிப்புப் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தப் பகிஷ்கரிப்பைக் கைவிடக் கோரி யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ்.மோகனதாஸ் வெளியிட்டுள்ள நீண்ட அறிக்கையிலேயே மேற்கண்ட உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும்,

### சாதகமான பதில் இல்லை

கொழும்புப் பல்கலைக்கழக உள்நாட்டு மருத்துவ நிறுவனத்தின் ஓர் அங்கமாக இருந்த சித்த மருத்துவப் பிரிவு 1983ல் ஏற்பட்ட இனக்கலவரத்தைத் தொடர்ந்து 1984ஆம் ஆண்டு யூலை மாதம் 2ஆம் திகதி யாழ். பல்கலைக் கழகத்தின் கலைப்பீடத்தின் கீழ் இயங்கும் ஒரு துறையாக இணைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பல பிரச்சினைகளுடன் இயங்கி வந்த சித்தமருத்துவத்துறையை ஒரு நிறுவனமாக்கும்படி யாழ். பல்கலைக்கழக கலைப்பீடமும், மூதவையும், பேரவையும் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவிடம் 1991ஆம் ஆண்டில் ஏகமனதாக கேட்டுக்கொண்டன.

அதற்கான சாதகமான பதில் கிடைக்காமையினால் 1993ஆம் ஆண்டு முதல் துணை வேந்தரின் நிர்வாகத்தின் கீழ் சித்த மருத்துவத்துறை செய்றபட்டு வருகின்றது. அண்மையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பேராசிரியர் எஸ்.பத்மநாதனை சித்த மருத்துவத்துறையின் கல்விசார் நடவடிக்கை மற்றும் நிர்வாகம் தொடர்பாக ஒரு ஆய்வை நடாத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பணித்தது. ஆணைக்குழுவின் பணிப்புரைக்கமைய அவர் யாழ்ப்பாணம் வந்து மாணவர்கள், விரிவுரையாளர்கள் மற்றைய பீடங்களைச் சேர்ந்த பேராசிரியர்கள் ஆகியோரைச் சந்தித்து ஓர் அறிக்கையை சமர்ப்பித்தார். அதில் அடங்கியுள்ள சிபார்சுகளுக்கமைய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்க முன்வந்துள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தின் கீழ் சித்த மருத்துவத்துறையை ஒரு நிறுவனமாக தரமுயர்த்துவதற்கு தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமெனவும் அந்த நடவடிக்கை எடுப்பதற்கு நீண்ட காலம் எடுக்கும் பட்சத்தில் தற்காலிகமாக சித்த மருத்துவத் துறையை மீண்டும் கலைப்பீடத்தில் சேர்த்து நிர்வாகத்தை நடத்தும் படியும் சிபார்சு செய்யப்பட்டிருந்தது. ஆனால் கலைப்பீடம் தங்கள் கடந்த கால அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த சிபார்சை ஏற்கவில்லை. ஆகவே சித்த மருத்துவத்துறையின் கல்வி, நிர்வாகம் மற்றும் புனரமைப்பு சம்பந்தமாக துணைவேந்தருக்கு சிபார்சு செய்ய ஒரு முகாமைத்துவ சபையை பல்கலைக்கழகம் நியமித்துள்ளது.

இதேவேளை, துணை வேந்தராக நான் பதவியேற்றபின் துணை வேந்தரின் நேரடி நிர்வாகத்தின்கீழ் இயங்கிவந்த மீன்பிடியியல், உடற் கல்விக் கற்கை நெறிகள் கூட தற்போது பொருத்தமான பீடங்களின் நிர்வாகக் கட்டமைப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. ஆகவே சித்தமருத்துவத்துறையை மட்டும் எனது நேரடி நிர்வாகத்தில் இருந்து பிரித்ததாகக் கருதுவது எவ்வகையிலும் பொருத்தமாகாது. தற்போது அமைக்கப்பட்டுள்ள முகாமைத்துவ சபை துணைவேந்தருக்கு தனது சிபார்சுகளை அறிவிக்கும்.

### பல்கலை மானியங்கள் ஆ.கு.விளக்கம்

இதுதவிர பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கத்தவராகிய பேராசிரியர் கே.டி.அருட்பிரகாசத்தை சித்த மருத்துவ மாணவர்கள் 21.07.2003 அன்று சந்தித்து தங்கள் பகிஷ்கரிப்பு சம்பந்தமாகவும் சித்தமருத்துவத் துறையை பீடமாக்குவது பற்றியும் கலந்துரையாடிய போது பேராசிரியர் அருட்பிரகாசம் அவர்கள் மாணவர்களுக்கு பின்வரும். விடயங்கள்பற்றி விளக்கிக் கூறியிருந்தார்.

* துணைவேந்தரின் கீழ் எந்தவொரு துறையும் நேரடியாக இயங்குவது சட்டத்திற்கு முரணானதாகும்.

* பல்கலைக்கழகங்களின் கீழ் பல நிறுவனங்கள் தொழிற்படுவது புதியவிடயமல்ல. அவ்வாறான நிறுவனங்கள் பின்வருமாறு,

கொழும்புப் பல்கலைக்கழகம்- உள்நாட்டு மருத்துவ நிறுவகம், கணனித் தொழில்நுட்ப நிறுவகம், தொழிலாளர் கல்விசார் நிறுவகம்.

களனிப் பல்கலைக்கழகம்- கம்பகா விக்கிரமாராச்சி ஆயுள் வேத நிறுவகம், நுண்கலை நிறுவகம.

மொறட்டுவப் பல்கலைக்கழகம்- தொழில்நுட்ப நிறுவகம்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சம்மதத்துடன் விபுலானந்த இசை நடனக் கல்லூரி பல்கலைக்கழக சட்டதிட்டதிற்கு அமைய நிறுவன அந்தஸ்திற்கு உயர்த்தப்பட்டுள்ளது. அதேபோல சித்த மருத்துவத் துறைக்கு நிறுவக அந்தஸ்த்து வழங்கப்படும்.

இதேசமயம், சித்த மருத்துவ மாணவர்களால் 8.7.2003ல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவருக்கு அனுப்பப் பட்ட கடிதத்தில் தாங்கள் சித்த மருத்துவத்துறையை பீடமாக்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து விரிவுரைகளை பகிஷ்கரித்து வருவதாகக் குறிப்பிட்டிருந்தனர். அந்தக் கடிதத்திற்கு பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் பேராசிரியர் பி.ஆர்.ஆர்.என். மென்டிஸ் தனது பதிலை 23.7.2003 திகதியிடப்பட்ட கடிதத்தின்மூலம் மாணவர் மன்ற தலைவருக்கு எனக்கூடாக அனுப்பிவைத்துள்ளார். அதில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் பின்வருமாறு,

* நான் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கத்தவராகிய பேராசிரியர் கே.டி.அருட்பிரகாசத்தை உங்கள் கடிதம் சம்பந்தமாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு கேட்டிருந்தேன். அவர் தாம் யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டைக் கல்லூரியில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியில் 21ஆம் திகதி மாலை சித்த மருத்துவ மாணவர் பிரதிநிதிகளைச் சந்தித்து 3 மணித்தியாலங்கள் கலந்துரையாடியதாகவும் மாணவர்களின் கோரிக்கைக்கு அமைய தான் ஒரு நிறுவகத்தின் செயற்பாடுகள் பற்றியும் இறுதிப் பரீட்சையின் பின்னர் யாழ். பல்கலைக்கழகம் தான் பட்டங்களை வழங்குமே தவிர நிறுவகம் வழங்காது எனவும் வலியுறுத்திக் கூறியதாகவும் குறிப்பிட்டார். மாணவர் மன்றம் பகிஷ்கரிப்பைத் தொடருமானால் எதிர்காலத்தில் சித்த மருத்துவ அலகுடன் எந்த பேச்சுக்கள் நடத்தவும் தான் தயாராக இல்லை எனவும் பிழையான வழிகளில் உங்கள் மன்றம் அறிவுறுத்தப்பட்டு தவறாக வழிநடாத்தப்பட்டு நிறுவனத்திற்கு பதில்பீடமாக்கப்பட வேண்டுமென கோரிக்கையை முன்வைத்துள்ளீர்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

### பேராசிரியர் சிபார்சு


பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பேராசிரியர் பத்மநாதனின் சிபார்சுக்கமையவே ஒரு நிறுவனத்தை உருவாக்கி அதனை சித்த மருத்துவத்துறையின் உயர் புலமைத்துவ நிலையமாக வளர்க்க வேண்டுமென்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளது. பேராசிரியர் பத்மநாதன் சித்த மருத்துவம் தமிழரின் பாரம்பரிய கலாசாரத்துடன் பின்னிப்பிணைந்த ஒரு மருத்துவ முறை என்றும் இந்த மருத்துவம் சிறந்த முறையில் வளர்க்கப் படாவிட்டால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தமிழ் இனத்திற்கு எதிராக செயற்படும் ஒரு அமைப்பு என மற்றவர்களை சிந்திக்க வைக்கும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேரவை ஓர் இடைக்கால நிர்வாக சபையை சித்தமருத்துவ அலகை நிர்வகிக்க அமைத்துள்ளமையை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஏற்றுக்கொண்டுள்ளது. அத்துடன் துணைவேந்தரின் கீழ் சித்த மருத்துவத்துறை இயங்கிவந்த இணைப்பை சில சட்டரீதியான காரணங்களுக்கமைய பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு 17.07.2003ல் நடைபெற்ற தனது கூட்டத்தில் இல்லாமல் செய்துள்ளது.

ஆகவே, நீங்கள் பகிஷ்கரிப்பைக் கைவிட்டு உங்கள் கற்பித்தல்/ கற்றல் கடமைகளைத் தொடர வேண்டுமென அறிவுறுத்துகின்றேன் என பேராசிரியர் மென்டிஸ் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் துணைவேந்தராகிய நான் எந்த விடயங்களையும் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்க்கலாம் என்ற நம்பிக்கையுடன் மாணவர்களையும் விரிவுரையாளர்களையும் கல்வி சாரா உத்தியோகத்தர்களையும் விரிவுரைகள் ஒழுங்காக மீண்டும் ஆரம்பிக்க சகல ஒத்துழைப்பையும் வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். பல்கலைக கழகம் எந்தத்துறையின் கல்வி மேம்பாட்டிற்காகவும் அபிவிருத்திக்காகவும் சகல வளங்களையும் நிதியையும் பயன்படுத்தும் எனவும் ஆகவே எதிர்காலம் சித்த மருத்துவத்திற்கு வளமாக அமைவதற்கு மாணவர்கள் பகிஷ்கரிப்பை கைவிடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன் என்றுள்ளது. (உ)











நேற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகங்கள் மற்றும் பயிற்சி மையமும் யுனெஸ்கோவும் இணைந்து நடத்தும் ஊடகவியலாளர் பயிற்சித் தொடரின் ஆரம்ப நிகழ்வில் மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்திலும், தலைவர் செ.அருட்செல்வன் உரைநிகழ்த்துவதை இரண்டாவது படத்திலும், துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் தொடக்கவுரையை நிகழ்த்துவதை மூன்றாவது படத்திலும், அங்கு வருகைதந்த சிறப்புவிருந்தினர்களை நான்காவது படத்திலும் காணலாம்.

## சப்பிரகமுவ மாகாணசபை

# ஐ.தே.க. உறுப்பினருக்கு எதிராக நீதிமன்றில் மனுத்தாக்கல்

(கொழும்பு)

சப்பிரகமுவ மாகாண சபையின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ஏ.எம்.டி.ராஜனின் பதவியை இரத்துச் செய்யக் கோரி டெல்லக்கே தர்மபாலா என்ற பௌத்த பிக்கு நேற்று முன்தினம் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

இம்மனுவில் தேர்தல் ஆணையாளர், சப்பிரகமுவ மாகாண ஆளுநர், ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடாத ஏ.எம்.டி.ராஜன் மாகாண சபை உறுப்பனராக நியமிக்கப்பட்டமை மாகாண சபைச் சட்டத்தின் 65வது பிரிவுக்கு முரணானது.

கொழும்பு உயர் நீதிமன்றத் தீர்ப்புக்கு அமைய தேர்தலில் போட்டியிடாத நபரை மாகாண சபை உறுப்பினராக நியமிக்க முடியாது எனவும் அம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி)

## செம்பு ஏற்றுமதிக்கு தடை

(கொழும்பு)

செம்பு உலோக ஏற்றுமதிகளுக்கு தடை விதிக்கப்படவுள்ளது.

இதற்கு அமைச்சரவை கொள்கையளவில் இணக்கம் தெரிவித்துள்ளது.

செம்பு மற்றும் பித்தளைப் பொருட்களின் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் நோக்குடனேயே இத்தடை விதிக்கப்படவுள்ளது. (தி)

# மண்வாசனை வீசும் "நகைச்சுவைக் கதம்பம்"

## ஈழத் தமிழிற்கு இந்நூல் ஒரு புதிய வரவு

21ஆம் நூற்றாண்டின், ஈழத்து எழுத்தாளர்கள் வரிசையில் 'நகைச் சுவைக் கதம்பம்' என்ற நூலை ஆக்கிய ஆசிரியர் இ.சிறிஸ்கந்த ராசாவும் அடங்குவர். வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும் என்ற பழமொழிக்கு இன்னும் உரம் ஊட்டும் வகையில் இந்நூலைப் படைத்து, வாசகர்கள் மத்தியில் தவழவிட்டபணி போற்றக்கூடியது.

ஆசிரியரின் நகைச்சுவைக் கதம்பம் பண்டிதர்கள் முதற்கொண்டு பாமர மக்கள்வரை சுவைக்கக் கூடிய தாயுள்ளது. 121 தலைப்பின்கீழ் அடங்கிய ஒவ்வொரு நகைச்சுவை துணுக்குகளும் ஏதோ ஒருவகையில் சமூகப்பூசல்களையும், சமூக நடைமுறைகளையும், சமூகத்திற்கு கொடுக்கும் அறிவுரையாயும் காணப் படுகின்றது. அந்த வகையிலே 'மத குருவிற்கு பதிலடிகொடுத்த பெண்' 'அவசரபபடக்கூடாது' 'ஆட்டிடையன் விசுவை மடக்கியது' 'கையிலுள்ள விரல்களுக்குள் சண்டை' 'ஏன். கலந் தாலோசிக்கவேண்டும்' 'தமிழ்மொழி அழிந்துவிடுமா?' 'பத்திரிகைச்செய்தி' 'கோழிக்கறியின் சுவை' 'மறதியால் வரும் கேடு' 'தகப்பன்-மகன் ஆசிரியர்' 'பழக்கதோஷம்' 'சமயோசித புத்தி' போன்றன காணப்படுகின்றன. என்னை மிகவும் கவர்ந்த பகிடித் துணுக்காக 'சிறுமி தாயிடம் கேட்ட கேள்வி' அமைந்தது. இது பிஞ்சிலேயே பழுத்த தன்மையை மிகவும் அழகாக, தற்காலத்தில் சிறுவர்கள் அனைவரும் உள்ளநிலையை படம் பிடித்து விட்டது. இது மிகவும் சிறந்ததே.

ஆசிரியர் ஆங்கிலச் சொற்களை இக்கதம்பத்தில் ஓரளவு கூடவே பாவித்துள்ளார். இதனால்




ஆங்கிலச்சொற்களை அறியாத சிலர் சற்றுத் தடுமாறியே பின்னரே புரியக்கூடிய சிக்கல்நிலையை உருவாக்கி உள்ளார். உதாரணமாக டிஸ்மிஸ், ஸ்கூல்பாக், பரசூட்... போன்ற இன்னோரன்ன சொற்கள் குறிப்பிடத்தக்கவை.

மண்வாசனைச் சொற்களால் இக்கதம்பம் புனையப்பட்டுள்ளது. இதனால் இது எமது மண்ணின் தாயிற்கு கிடைத்த இன்னொரு மலரணை எனலாம். சமகாலத்திற்கு மிகவும் பொருத்தமாய், எல்லோரும் படைப்பது போல் அல்லாமல் எல்லோராலும் விரும்பிப்படிக்கும்வகையில் சற்று வித்தியாசமாய் வாசகர்மட்டத்தை அதிகப்படுத்தும வகையிலே நகைச்சுவையை ஓர் நூல வடிவில் சமைத்தது. சிறந்த நூலாசிரியனுக்கு இருக்கும் பண்பினை எடுத்துக் காட்டுகின்றது.

இவற்றை எல்லாம்விட, நன்னூலர் குறிப்பிடுவது போல சிறந்த

| | |
|---|---|
| நூல் | : நகைச்சுவைக் கதம்பம் |
| ஆசிரியர் | : இ.சிறிஸ்கந்தராசா |
| விலை | : ரூபா. 100 |

நூல்ாசிரியருக்கு இருக்கவேண்டிய பண்பினை நாம் இவ் நூலாசிரியரிலும் காணமுடிந்தது. அதாவது ஒத்துக்கொள்ளும் பண்பு அந்த வகையிலே,

40 வருடங்களுக்கு மேலாக நான் வாசித்து, ரசித்து சுவைத்தவைகளும, எனது வாழ்க்கையில் நடந்த மறக்கமுடியாத நகைச்சுவை சம்பவங்களை 'மலரும் நினைவுகள' நகைச்சுவைக் கதைகளாகவும்,

**திறனாய்வுக் களம்**

விகடத் துணுக்காகவும் எழுதியுள்ளேன்.. இந்நூலில் உள்ள நகைச்சுவைக் கதைகள் விகடத் துணுக் குகள் பல வும்காலங்காலமாக சொலலப்பட்டு வருபவை. பிறரின் கற்பனையல்உருவானவை இவற்றில் பல கதைகள் பல நூல்களிலிருந்து கிடைத்தன. சில கதைகள் முழுதும என் கற்பனையில் உருவானவை. சில நகைச் சுவைக் கதைகளைத் தொகுத்தும் எனது நடையில் எழுதி சில மாற்றங்களையும் செய்ததுமே இந் நூலில் என்முயற்சி எனலாம்.

(நூலாசிரியரின் முகவுரை, பக்.10) என்று கூறியுள்ளவை தானுமொரு சிறந்த பண்புடைய நூலாசிரியன் என்பதை எடுத்துக் காட்டி விட்டார் அல்லவா?

எனவே இறைவன் எல்லோருக்கும் எதையும் கொடுப்பது இல்லை. கலைஎனறது சரஸ்வதியினால் அளிக்கப்படும் ஒரு கொடைஎனலாம் இசிற்ஸ் கந்தராசா அவர்களும் சரஸ்வதியின் அருள்பெற்ற ஒரு நகைச்சுவை கலை வாய்ந்த ஒரு கலைஞன் என்று கூறுவதில் நான் மனமகிழ் வெய் கின்றேன். இவரது 'நகைச் சுவைக்கதம்பம்' மூளைக்கு வேலை கொடுப்பதாயும், அறிவிற்கு விருந்தாயும், வயிறுநோகச் சிந்தித்து சிரிக்கவும் கூடியு அமுதவிருந்து தான் நகைச் சுவைக் கதம்பம் என்று கூறினால் மிகையாகாது.□

**சசிரஜனி புலேந்திரன்**

### கூரையால் விழுந்துபடுகாயம்

(யாழ்ப்பாணம்)

வீட்டுக்கூரை வேலைசெய்து கொண்டிருந்த போது தவறிவிழுந்த இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்ககப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் நண்பகல் இடம்பெற்ற இச்சம்பவத்தில், கிளிநொச்சி இராமநாதபுரம் புதுக்காட்டைச் சேர்ந்த சின்னத்துரை ஸ்ராலின் பயஸ்(வயசு 20) என்பவரே காயமடைந்தவராவார். (த)

### மாணவர்களை காணோம்

(கொழும்பு)

அம்பலாங்கொடைப் பகுதியில் பாடசாலைஒன்றில் கல்விகற்கும் 3மாணவர்களை காணவில்லை என பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆண்டு 10ல் கல்விகற்கும் 14வயதிற்குட்பட்ட மாணவர்கள் மூவரே காணாமல் போயுள்ளனர். (தி)

### பயணிகள் பீதவிப்பு

(வேலணை)

வேலணைப் பிரதேச சபையினால் அல்லைப்பிட்டிச் சந்தியில் அமைக்கப்பட்ட பஸ்தரிப்பு நிலையத்தின் கூரைத்தகடுகள் அண்மையில் வீசிய கடும் காற்றினால் சேதமடைந்துள்ளன.

இதனால் பரயாணிகள் மழை, வெயில் போன்றவற்றினால் பாதிக்கப்படுகின்றனர்.

அல்லைப்பிட்டிச் சந்தியில் இந்த பஸ்தரிப்பு நிலையத்தை தவிர வேறு கட்டடங்கள் ஏதுவும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ-47)

## இடைக்கால நிர்வாகசபை குறித்து அரசு பூரண விளக்கமளிக்க வேண்டும்

### ஜே.வி.பி.பா.உ. விமல் வீரவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கத்தால் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகசபைத் திட்ட வரைபு தொடர்பாக, தற்போது எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு அரசு தெளிவான பதில்ஒன்றை அளிக்க வேண்டும்.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச நேற்றுப் பாராளுமன்றத்தில் கேட்டுக்கொண்டார்.

சபாநாயகர் யோசப் மைக்கல் பெரேராவின் அனுமதியுடன் அங்கு தொடர்நதும் உரையாற்றிய அவர்,

பிரதமர் ரணில் விக்கிம சிங்கவினால் வழங்கப்படவுள்ள வடக்கு-கிழக்கு மாகாண இடைக்கால நிர்வாக சபைத்திட்ட வரைபினால் -நாட்டுக்கு அபாயகரமான விளைவுகள் ஏற்படக் கூடிய சாத்தியக்கூறுகள் ஏற்பட்டுள்ளன.

இடைக்கால நிர்வாகசபை திட்ட வரைபு தொடர்பாக அரசாங்கம் எழுத்து மூலமும், வாய்மொழி மூலமும் வழங்கி இருந்த விடயங்கள் தற்போது வெளி வந்துள்ளன.

எனினும் அரசாங்கமும், அரச அதிகாரிகளும் வெளியிட்ட கருத்துக்களின் பிரகாரம் பல்வேறு சிக்கல்கள் எழுந்துள்ளன.

அத்துடன், இடைக்கால நிர்வாக சபைகுறித்த எந்வொரு யோசனையும் இதுவரை அனுப்பவில்லை என அரசு இப்போது ஏன் தெரிவிக்கின்றது எனவும் அங்கு. அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (தி)

## சுயாதீன நிதிய சட்ட மூலத்தை உருவாக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

அனைத்து நீதிமன்றக் கட்டங்கள் மற்றும் அலுவலகங்களின் நிர்வாக நடவடிக்கைகளை சுயாதீனமாக மேற்கொள்வதற்கு சுயாதீன நிதியம் ஒன்றை அமைப்பதற்கான சட்டமூலமொன்றை உருவாக்குமாறு பிரதம நீதியரசர் சரத் என் சில்வா நிதி அமைச்சர் கே.என் சொக்ஸி இடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.


இது தொடர்பாக நிதிஅமைச்சர் கே.என்.சொக்ஸி கருத்துத் தெரிவிக்கையில், இதுதொடர்பாக பிரேரிக்கப்பட்ட சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் சகல நீதி மன்றங்களும் 12உயர் நீதிமன்றங்களின் கீழேயே இயங்குகின்றன. இதனால் உயர் நீதிமன்றத்தின் ஊடாக ஒதுக் கீடு செய்யப்படும் நிதியின் மூலமே நீதிமன்றக் கட்டடங்கள் பராமரிப்புக்கள் மற்றும் அலுவலக நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படு கின்றன.

பிரேரிக்கப்பட்ட நீதிமன்ற நிர்வாகம் தொடர்பான சுயாதீன நிதியத்திற்கு, பிரதேச நீதிமன்றங்களின் தண்டப்பண வருமானத்தின் 10வீதத்தைப் பெற்றுக்கொடுக்கவும் தேவையான எஞ்சிய பணத்தை நிதி அமைசசின் மூலம் பெற்றுக் கொள்ள வும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படடதாகவும் அவர்மேலும் தெரிவித்துள்ளார். (தி)

## ஈழத்து இலக்கியப் படைப்புகள் இழிநிலைக்கு செல்வதைத் தடுத்து நிறுத்த வேண்டும்

### செங்கை ஆழியான் அழைப்பு



(யாழ்ப்பாணம்)

தமிழ் இலக்கிய உலகம் மீண்டும் ஈழத்து இலக்கியப் படைப்புக்களைத் தரங்குறைந்தவையாக விமர்சிக்கக்கூடிய ஆபத்தான நிலை உருவாகாமல் தடுக்க, 'வேள்வி நெருப்பு' போன்ற தரமான நூல்கள் தாராளமாக வெளிவர வேண்டும்.

இணுவில் கலை இலக்கிய வட்டத்தின் ஆதரவில் இணுவில் மத்தியகல்லூரியில் அண்மையில் இடம்பெற்ற பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரத்தின் 'வேள்வி நெருப்பு' இரண்டாம் பதிப்புநூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார் ஈழத்தின் பிரபல ஆக்க இலக்கியகர்த்தா செங்கை ஆழியான்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

இற்றைக்கு முப்பதாண்டுகளுக்கு முன்னர், இலங்கைத்தமிழ் எழுத்தாளர்கள் தமிழக எழுத்தாளர்களைவிட இருபது ஆண்டுகள் பின் தங்கியவர்களாக இருக்கிறார்கள் என்று பகீரதன் முதலிய தமிழக எழுத்தாளர்கள் கூறிவந்தனர்.

இவை வெறுமனே எழுந்தமானமான கூற்றுக்கள் என்பதனை எம்மவர்கள் சிருஷ்டித்த நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள் போன்ற படைப்புகள் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்தின.

ஈழத்தமிழப் படைப்பாளிகள் தனித்துவமான-கனதிமிக்க படைப்புக்களின கர்த்தாக்கள் என்று தமிழக எழுத்தாளர்களது வாய்களாலேயே சொல்ல வைத்த பெருமை படைத்தவர்கள் நாங்கள்.

இந்த நிலையில் இன்று பெருகியுள்ள அச்சிடல் வசதிகளைப் பயன்படுத்தி, பணம் படைத்தவர்கள் தான்தோன்றித்தனமான முறையில் இலக்கியம் என்ற பெயரில் ஏராளமான குப்பை கூழங்களை வெளியிடுகின்றனர்.

எமது படைப்புக்களை தரங்குறைந்தவையாக விமர்சிக்கக்கூடிய ஆபத்தான,ஆரோக்கியமற்ற நிலையை இது உருவாக்கும் என்றார். (உ)

## பூநகரி கடற்பரப்பிலும் கடற்படை அட்டகாசம்

(கிளிநொச்சி)

பூநகரிக் கடற்பரப்பில் அண்மைக்காலமாக இலங்கைக் கடற்படையினரின் அடாவடித்தனங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

கடந்த 19ஆம் திகதி பகல் வேளையில் பள்ளிக்குடாக் கடற்பரப்பில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த ரவி என்பவரும் அவரது மகனும் கடற்படையினரால் தாக்கப்பட்டனர்.

இதேபோன்று இரண்டு வாரங்களுக்கு முன்னரும் இப்பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர். மீனவர்கள் இவ்வாறான தாக்குதல்களுக்குத் தொடர்ந்தும் உள்ளாவதனால் கடற்றொழிலுக்குச் செல்ல அவர்கள் அச்சமடைந்துள்ளனர்.

இலங்கைக் கடற்படையினரின் இவ் அடாவடித்தனங்கள் குறித்து பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் கடும் எதிர்ப்பினை தெரிவித்துள்ளது.

இதேபோன்று, வடமராட்சி மற்றும் யாழ்ப்பாண மீனவர்களையும் தொழிலுக்குச் செல்லவிடாது கடற்படையினர் தடுப்பதுடன் மீனவர்கள் மீது பல்வேறுபட்ட அழுத்தங்களையும் பிரயோகித்து வருகின்றனர். (உ-8)






இணுவில் மத்திய கல்லூரியில் இடம்பெற்ற ச.வே.பஞ்சாட்சரத்தின் 'வேள்வி நெருப்பு' 50 கதைகள் நூல் வெளியீட்டு விழாவில் பிரபல எழுத்தாளர் செங்கைஆழியான் சிறப்புரை நிகழ்த்துவதையும் கவிஞர் சோ.பத்மநாதனும் தலைவர் துரை எங்கரசும்,ந.சத்தியபாலனும் காணப் படுகின்றனர். (படம்-1) அதிபர் சு.சண்முககுலகுமார் நூலின் சிறப்புப் பிரதியை முன்னாள் அதிபர் செ.சோதிப்பெருமாளிடம் இருந்து பெற்றுக்கொள்வதையும் நூலாசிரியர் பஞ்சாட்சரம் ஆகியோர் (படம்-2) காணப்படுகின்றனர்.

### 20:20 கிரிக்கெட் சுற்றுப்போட்டி

# முதற் சம்பியன் பெருமையை தனதாக்கிய சரேய் அணி

இங்கிலாந்தின் பிராந்திய அணிகளுக்கிடையே முதன் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் 20 ஓவர்களைக் கொண்ட இருபதிற்கு இருபது கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் ''சரேய் அணி'' பிராந்திய சம்பியன் பட்டத்தினை வென்றிருக்கின்றது.

கிரிக்கெட் போட்டியின்பால் ரசிகர்களை ஈர்த்திழுக்கும் நோக்கிலேயே இப் புதிய கிரிக்கெட் போட்டி முறை இங்கிலாந்தில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றது. சுவாரஸ்யமான அம்சங்களை உள்ளடக்கியதாகவும், புதிய விதிகளுடனும் அறிமுகப்படுததப்பட்டுள்ள இப்போட்டி ஏற்பாட்டாளர்களுக்கு பெரும் வெற்றியைப் பெற்றுக் கொடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிககு ''சரேய்' அணியும், ''ரொரிக்சேய்'' அணியும் தகுதி பெற்றன. இவ் இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ''ரொரிக்சேய்'' அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 115 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அணி ''சரேய்'' அணி 10.5 ஓவர் முடிவில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கான 116 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

இதனமூலம் அறிமுக ஆண்டிலேயே இருபதிற்கு இருபது கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் சம்பியனான பெருமையை சரேய் அணி தனதாக்கிக் கொண்டுள்ளது. (உ-68)

### ஜக்கலீஸின் தந்தையின் மரணம்

# தென்னாபிரிக்க அணியில் தாக்கத்தை ஏற்படுத்துமா?

இங்கிலாந்திற்கு எதிராக இடம் பெறவிருக்கின்ற டெஸ்ற் போட்டித் தொடரில் தென்னாபிரிக்க வீரர் ''ஜக்கலீஸ்'' கலந்துகொள்வாரா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. ஜக்கலீஸின் தந்தையார் கடந்த புதனன்று உயிரிழந்ததை அடுத்தே இந்தச் சந்தேகம் எழுந்துள்ளது.

முதல் போட்டியில் கலந்துகொள்ளப் போவதில்லை என ஏற்கனவே, ஜக்கலீஸ் அறிவித்திருந்தார் என்பதும் இங்கிலாந்தில் இறுதியாக நடைபெற்று முடிந்த மும்முனை ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளின் போது இங்கிலாந்து மற்றும் சிம்பாவே அணிகளுக்கெதிராக 109.66 என்ற ஓட்ட சராசரியில் ஓட்டங்களை இவர் குவித்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. இவ் டெஸ்ற் தொடரில் ஜக்கலீஸ் கலந்துகொள்ளாவிடின் இது தென்னாபிரிக்க அணிக்கு பேரிழப்பாக அமையும் எனகருதப்படுகிறது. (உ-68)

# முன்னேறிவரும் ஆஸி. முதலிடத்தைப் பெறுமா?

ஸ்பெயின் தலைநகரான பாக்ஸிலோனாவில் நடைபெற்றுவருகின்ற உலக நீச்சல் போட்டிகளில் 11ஆம் நாள் நிறைவின் போது 8தங்கம், 4வெள்ளி, 4வெண்கலப் பதக்கங்கள் என்பவற்றை பெற்று ரஷ்யா தொடர்ந்து முன்னிலை வகிக்கின்றது.

இதேவேளை, 3ஆம் இடத்தில் இருந்த ஆஸ்திரேலியா, 6தங்கம், 5வெள்ளி, 3வெண்கலப் பதக்கங்கள் என்பவற்றைப் பெற்று 2ஆம் இடத்திற்கு முன்னேறியுள்ளது. 5தங்கம், 4வெள்ளி, 6வெண்கலப் பதக்கங்கள் என்பவற்றைப் பெற்று சீனா 3ஆம் இடத்திலும் உள்ளது.

ஐக்கிய அமெரிக்கா, ஜேர்மனி, ஜப்பான், கனடா, இத்தாலி, உக்ரைன், பிரான்ஸ் என்பன முறையே 4முதல் 10 வரையான இடங்களை வகிக்கின்றன.

(உ-68)

## விளையாட்டுச் செய்திகள்

# கால்பந்தாட்டப் போட்டிகளுக்கு இனி பொலிஸ் பாதுகாப்பு

இலங்கைக் கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடாத்தப்படும் சகல பிறீமியர் லீக் போட்டிகளுக்குப் பாதுகாப்பு ஏற்பாடு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக பிரபல கழகங்கள் மோதுகின்ற போட்டிகளுக்கு மேலதிக பொலிஸ் பாதுகாப்பு வழங்குவதற்கும் சம்மேளனம் தீர்மானித்துள்ளதாக, சம்மேளனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி கிறிசாந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

கடந்தவாரம் புனித பெனடிக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற நீர்கொழும்பு ''யுத்'' மற்றும் களுத்துறை ''புளூஸ்ரார்'' ஆகிய கழகங்களுக்கிடையிலான போட்டியின் போது பார்வையாளர்கள் அரங்கினுள் நுழைந்து வீரர் ஒருவரைத் தாக்கிய சம்பவத்தைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, குறிப்பிட்ட வேளை நிறைவடைவதற்கு 13 நிமிடங்கள் இருக்கையில் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட அந்தப் போட்டி தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு அதிகாரிகளினால் வழங்கப்பட்டுள்ள அறிக்கைகள் போதுமானதாக இருக்கவில்லை என்றும் மேலும் சில விடயங்களைத் தெளிவுபடுத்துமாறும் அவர்களைக் கோரியிருப்பதாகவும், இவை கிடைக்கப்பெற்றதும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-68)

### விளையாட்டு விழா

சுன்னாகம் சிவன் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுவிழா இன்று சனிக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு க.கருணைநாயகம் தலைமையில் சுன்னாகம் கிழக்கு சனசமூக நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சுன்னாகம் ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளர் எஸ்.சுந்தரேசனும், சிறப்பு விருந்தினர்களாக தமிழர் புனர்வாழ்வுக்கழக மாவட்ட இணைப்பாளர் சி.றஞ்சன்பாபு, சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சி.செல்வவிநாயகம், முறைசாராக் கல்விப் பணிப்பாளர் சி.சிவநேசன், ஜே/197 கிராம சேவையாளர் வி.எம்.இராமலிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

(உ-18)

### அபிவிருத்தி லொத்தர் சபை மூலம் ஜனாதிபதிக்கு என்ன கிடைக்கும்...?




### வடமராட்சி கிழக்கில்

# கண்ணிவெடி அகற்றுவது பற்றி ஆராய தென்பகுதி விற்பன்னர்கள் வருவர்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கில் மருதங்கேணி, நாகர் கோவில் பகுதிகளில் கண்ணிவெடிகளை அகற்றுவதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளுக்காக கொழும்பிலிருந்து நிபுணர்கள் இருவர் யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

எதிர்வரும் 29ஆம் திகதி இவ்விதம் இங்கு வருகை தரும் பூகோள அளவிடல் மற்றும் கண்ணிவெடி அகற்றும் துறைப் பணிப்பாளர் அனில் பீரிஸ் பூகோள ஆராய்ச்சியாளர் உதய டி சில்வா ஆகியோர் அன்றைய தினம் காலை 9.30 மணிக்கு யாழ். செயலகத்தில் கலந்துரையாடல் ஒன்றிலும் பங்கேற்கவுள்ளனர்.

மதிவெடி அகற்றுதலுக்குரிய மண் தொடர்பான கணிப்பீடுகள் இத்திட்டத்திற்கான புதிய தொழில்நுட்பங்கள் ஆகியன தொடர்பில் சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர்கள் மற்றும் பொறியியலாளர்களுடனும் கருத்துப் பரிமாறும்வரை மேற்கொள்வரெனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-4)

# வன்முறை எண்ணங்கள் பெருக தொலைக்காட்சி வழிவகுக்கிறது

### கருத்துக் கணிப்புமூலம் உறுதி

(கொழும்பு)

சிறுவர்களுக்கிடையே வன்முறை அடிப்படையிலான எண்ணங்கள் உருவாகுவதற்குத் தொலைக்காட்சியே முதன்மைக் காரணியாக அமைவதாகப் பெற்றோர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறதாக களனிப் பல்கலைக் கழகம் நடத்திய கருத்துக் கணிப்பில் இருந்து தெரியவந்துள்ளது.

இந்தக் கருத்துக் கணிப்பில் பங்கு பற்றிய 30 சதவீதமான பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளின் மனங்களில் எழும் வன்முறை எழுச்சிகளுக்கு தொலைக்காட்சியே காரணம் எனக் கூறியுள்ளனர்.

41 சதவீதமான பெற்றோர்கள் பாரம்பரிய கலாசாரத்துக்கு அமைய பிள்ளைகளை வளர்ப்பதற்கு தொலைக்காட்சியே பெரும் இடையூறாக இருக்கிறது எனக்கூறியுள்ளனர்.

இதனை அடுத்து தொலைக்காட்சி தொடர்பான அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள கல்விமான்கள் சிறுவர்களுக்கு உடல், உள ரீதியாக பாதிப்படையச் செய்யும் நிகழ்ச்சிகள் அனைத்தும் தடை செய்யப்பட வேண்டும் என சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுள்ளார்கள். (உ-10)

### ரோந்து அதிகரிப்பு

(வேலணை)

அல்லைப்பிட்டி கடற்படை சோதனைச் சாவடியிலிருந்து ஏ-39 வேலணை குறிகட்டுவான் பாதை வரையான பகுதிகளில் கடற்படையினரின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், வேலணை, ஊர்காவற்றுறை, புங்குடுதீவு ஆகிய பகுதிகளில் அதிகளவு கடற்படையினர் இரவு,பகல் என காவற்கடமைகளிலும் ஈடுபட்டிருப்பதை காணக்கூடியதாக உள்ளது. (உ-47)

### விளையாட்டு விழா

பாலர் கல்விக் கழக நிர்வாகத்தின் கீழ் இயங்கும் முடமாவடி ஞானக்குழந்தை பாலர் பாடசாலையின் 3ஆவது ஆண்டு விளையாட்டு விழா எதிர்வரும் 30ஆம் திகதி புதன்கிழமை பி.ப.2.00 மணிக்கு செல்வி த.ஜெயமாலினி தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழக வணிகத் துறைத் தலைவர் க.தேவராஜா சிறப்பு விருந்தினராக யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியரும், ஞானவைரவர் சனசமூக நிலைய செயலாளருமான ப.ரகுமார், கௌரவ விருந்தினர்களாக பாலர் கல்விக் கழக இணைச் செயலாளர் திருமதி ச. ஜெயபாலசிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-4)

# குத்துச்சண்டை வீரர் டைசன் நீதிமன்றில் நிறுத்தப்பட்டார்

உணவு விடுதி ஒன்றில் ஏற்பட்ட மோதல் சம்பவத்தில் குற்றம் சாட்டப்பட்ட முன்னாள் உலக அதிபாரக் குத்துச் சண்டை வீரரான ''மைக் டைசன்'' நேற்று முன்தினம் நியூயோர்க் நகரின் நீதிமன்றில் ஆஜராகியிருந்தார்.

கடந்தமாதம் உணவு விடுதி ஒன்றில் வைத்து இருவரை மூர்க்கத்தனமாக டைசன் தாக்கியதாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டது எனினும், இவரது சட்டத்தரணிகள் இவர் சார்பாக நீதிமன்றத்தில் வாதிட்ட போதிலும் பிரதிவாதிகள் தரப்பில் ஆஜரான சட்டத்தரணிகள் இவரின் முன்னைய் பாலியல் குற்றச்சாட்டுகளை சான்றாக வைத்து குற்றம் சுமத்தியுள்ளனர். இதனை அடுத்து நீதிபதி இவ்வழக்கு விசாரணைகளை வருகின்ற செப் 30ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (உ-68)

# துரையப்பா விளையாட்டரங்க புனரமைப்பு மிகத் துரிதம்

யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கின் புனரமைப்புப் பணிகள் இன்னும் ஒரு மாத காலத்துள் நிறைவடையும் என மைதான புனரமைப்புப் பணிகளுக்குப் பொறுப்பான பிரதம பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் தேசிய விளையாட்டு விழா எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில், மைதானப் புனரமைப்புப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. மைதானத்தின் கிழக்குப் புறத்தில் கம்பி வேலிகள் பொருத்தப்பட்டுள்ளதுடன், மைதானத்தின் ஓடுபாதையில் புற்கள் நடப்பட்டு அவை பராமரிக்கப்பட்டு வருகின்றன. இதைத் தவிர மைதானத்தின் மேற்குப் புறத்தில் பார்வையாளர்கள் அரங்கு அமைக்கும் பணிகளும் மைதானத்தில் ஏனைய பகுதிகளில் புற்கள் நீடும் பணியும் இடம் பெற்று வருகின்றது. (உ-68)

# அமெ.-ஜேர்மன் இடையில் கடுமையான போட்டி

பிரான்ஸில் நடைபெற்றுவரும் சைக்கிளோட்டப் போட்டியில் சம்பியன் பட்டத்தினைக் கைப்பற்றும் நோக்கில் அமெரிக்காவின் லாம் ஆம்ஸ்ரோங் மற்றும் ஜேர்மனியின் ஜான் உல்றிக் ஆகியோருக்கிடையில் கடுமையான போட்டி நடைபெற்றுவருகிறது.

இன்று இடம்பெறவிருக்கின்ற நேரத்தினை அளவிடும் போட்டியின் பின்னரே வெற்றி யாருக்கு என்று தீர்மானிக்கப்படவிருக்கின்றது.

உலகப் புகழ்பெற்ற ட்ரூவெல் டீ.பிரான்ஸ் சைக்கிளோட்டப் போட்டியில் 16 வது கட்டம் நிறைவடைந்த நிலையில் அமெரிக்காவின் லான் ஆம்ஸ்ரோங் முன்னணியில் இருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-68)

# அடுத்த மாத முற்பகுதியில் பிரதமர் சீனா விஜயம்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அடுத்த மாதம் சீனாவுக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 8ஆம் திகதி சீனா செல்லும் பிரதமர் அங்கு தொடர்ந்து 6 நாட்கள் தங்கியிருப்பார்.

இப்பயணத்தின்போது இருதரப்பு பரஸ்பர வர்த்தகம் குறித்து அந் நாட்டுத் தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

அதேவேளை, சீனத் தலைநகர் பீக்கிங்கில் நடைபெறவுள்ள கூட்டம் ஒன்றிலும் பிரதமர் உரையாற்றவுள்ளார். (உ-8)



# இந்தியாவில் இருந்து வருவோரை புலனாய்வுத் துறை கண்காணிக்கும்

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் இத்தாலி உட்பட பல்வேறு ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லும் நோக்கில் இலங்கை வரும்,கீழைத்தேச நாடுகளான இந்தியா, பாகிஸ்தான் உட்பட அனைத்து வெளிநாட்டவர்களையும் விமான நிலையத்தில் வைத்தே கைது செய்வதற்கான தீவிர நடவடிக்கைகளை இலங்கை இரகசிய பொலிஸார் மற்றும் புலனாய்வுத்துறையினர் மேற்கொண்டுவருவதாக உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் இதுபற்றி கருத்துத்தெரிவிக்கையில், இந்தியா பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் போன்ற நாடுகளில் இருந்து சட்டவிரோதமான முறையில் ஐரோப்பிய நாடுகளுக்கு செல்வதற்கான ஓர் கேந்திர தளமாக இலங்கையைப் பயன்படுத்துவதற்காகவே அந் நாடுகளிலிருந்து இலங்கைக்கு பிரிவு பிரிவாக படையெடுத்து வருகின்றனர்.

இவர்களின் இந்த நடவடிக்கைக்கு வசதியான ஓர் இடமாக இலங்கை அமைந்துள்ளது. இவ்வாறான நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும்வகையிலேயே புதிய பல நடவடிக்கைகளை இரகசிய பொலிஸாருடன் இணைந்து புலனாய்வுத் துறையினர் மேற்கொண்டுவருகின்றனர்.

வெளிநாட்டுக்குச் செல்லும் நோக்கில் இலங்கை வந்து அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்ட பாகிஸ்தான் - இந்தியா பிரஜைகள் சுமார் 640பேர் இதுவரையில் இலங்கை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன் காரணமாக இவ்வாறான சட்ட விரோதமான முறையில் வெளிநாடு செல்லும் இலங்கைப் பிரஜைகளின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ளதாகவும் ஜோன் அமரதுங்க குறிப்பிட்டுள்ளார்.

சுற்றுலாப்பயணிகள் என்ற போர்வையில் அதற்குரிய விசா மூலம் இலங்கை வரும் கீழைத்தேச நாட்டவர்கள் திட்டமிட்டபடி தென் பகுதிகளை நோக்கி படையெடுக்கின்றனர். அங்கு இவர்களின் சந்தேகத்திற்கிடமான செயற்பாடுகள் பற்றி இரகசியப் பொலிஸாருக்கு கிடைக்கும் தகவல்களை அடுத்தே இவர்கள் கைது செய்யப்படுகின்றார்கள்.

இனிவரும் காலங்களில் இவ்வாறான செயற்பாடுகளை முற்றாக நீக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. இதன் முதற்கட்டமாக இந்தியா, பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளிலிருந்து விமானம் மூலம் இலங்கை வருவோர் குறித்து இரகசியபொலிஸாரும், புலனாய்வுத் துறையினரும் மிக அவதானமாக விமான நிலையத்திலேயே கண்காணிப்பார்கள். அவ்வாறு சந்தேகத்திற்கிடமான முறையிலுள்ளவர்கள் அவ்விமான நிலையத்திலேயே வைத்து உடனடியாகவே கைதுசெய்யப்படுவார்கள். இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனவும் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார். (18)

# அரச திணைக்களங்களில் தமிழ் மொழி மூல அதிகாரிகள் இல்லை

(கொழும்பு)

அரசாங்க சேவைகளில் உள்ள திணைக்களங்கள் மற்றும் நிர்வாகங்களில் தமிழ் மொழி மூலம் கடமையாற்றக்கூடிய அதிகாரிகள் இல்லாத காரணத்தாலேயே, தமிழ் மொழியை அரசகரும மொழியாக மாற்றமுடியாதுள்ளது என நிதி நிர்வாக மறுசீரமைப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் டபிள்யூ. யூ.பி.எஸ் ஜெயவர்த்தன் தெரிவித்துள்ளார்.

அரசமொழித் திணைக்களத்தில் நடை பெற்ற அரச மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கான செயலமர்வில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் பேசிய அவர், அரச சேவையில் சிங்கள மொழி மூலம் கடமையாற்றும் அதிகாரிகளே 100 வீதம் இருக்கின்றனர் என்றார்.

இந்நிகழ்வில் அரச சேவை ஆணைக்குழுவின் தலைவர் உட்பட பல உயர்அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (தி)

# யாழ்ப்பாணத் திட்ட வரைபு பூர்த்தி

(கொழும்பு)

யாழ். மாவட்ட அபிவிருத்திப் பணிகள் தொடர்பான திட்ட விபரங்கள் அடங்கிய யாழ்ப்பாணத் திட்ட வரைபை புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு நேற்று முன்தினம் பூர்த்தி செய்துள்ளது.

கடந்த 16 மாதங்களாக பல்கலைக்கழக கல்விமான்கள், அரச அதிகாரிகள், சர்வதேச ஏஜென்சிகள் ஆகியவற்றின் உதவியுடன் இவ்வறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா,

இவ்வறிக்கையில் உட்கட்டமைப்பு புனர்வாழ்வுப் பணிகள் உள்ளிட்ட பல விடயங்கள் அடங்கியுள்ளன.

யாழ்ப்பாணப் புனரமைப்பு பணிகளுக்கென உலகவங்கி சர்வதேச நாணய நிதியம் என்பவற்றிடம் இருந்து நிதிஉதவிகள் பெற்றுக்கொள்ளப் படவுள்ளன.

யுத்தச் சூழ்நிலை காரணமாக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள தென மராட்சி,முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களின் புனரமைப்புப் பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

வடக்கில் இருந்து 55 பாடசாலைகளை புனரமைக்கும் வைபவத்தில் தான் எதிர்நோக்கிய பிரச்சினைகள் புனரமைப்புக்கான இலக்குகளை விரைவில் எய்தவேண்டும் என்ற மனோதிடத்தை வலுப்படுத்தியுள்ளன என்றும் தெிவித்துள்ளார். (தி)

# செய்தித் துளிகள்

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சரசாலை பெரிய தாய் முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை பி.ப 2.30மணிக்கு சபைத் தலைவர் ந.பரமசாமி தலைமையில் இடம்பெறவுள்ளது. (உ-18)

* * *

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி சேவி கண்ணாடித் தொழிற்சாலையின் பாதிக்கப்பட்டோா ஊழியர் சங்கத்தின் மாதாந்தப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை மு.ப 11மணிக்கு நீர்வேலி கந்தசாமி கோவில் சனசமூக நிலையத்தில் நடைபெற்வுள்ளது. (உ-10)

## மாதாந்த கூட்டம்

(சில்லாலை)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் மாதாந்தப் பொதுக் கூட்டம் யாழ்ப்பாணம் நாலாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள அதன் பிரதான காரியாலயத்தில் எதிர்வரும் 30ஆம்திகதி புதன் கிழமை பி.ப 2.30மணிக்கு இடம் பெறவுள்ளது. (உ-58)

## பூங்கனிச் சோலையில் மாபெரும் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி முடமாவடியில் அமைந்துள்ள பூங்கனிச்சோலையில் மாபெரும் கண்காட்சியும் விற்பனையும் இன்றும் நாளையும் மின்னொளியில் இடம்பெறவுள்ளது.

தினமும் காலை 8.30மணி முதல் இரவு 8மணிவரை இக்கண் கவர் கண்காட்சியைப் பார்வையிட முடியும். (உ-18)

## கவிதை நூல் அறிமுகவிழா

(கிளிநொச்சி)

கருணாகரன் எழுதிய ''ஒரு பயணியின் நிழ்காலக்குறிப்புகள்'' எனும் கவிதை நூல் அறிமுக விழாவும், விமர்சன அரங்கும் கடந்த புதனன்று இடம்பெற்றது.

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் எழுத்தாளர் நிலாந்தன் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் வரவேற்புரையினை ஆசிரியர் த.வித்தியசேகரனும் விமர்சன உரைகளை ''புலிகளின் குரல் வானொலி பிரதம செய்தி ஆசிரியர் ரி.தவபாலனும் எழுத்தாளர் விவேக்கும் நிகழ்த்தினர்.

கவிதை நூல் பிரதிகளை க.சௌந்தரராஜன் வழங்கினார்.

பதிலுரையினை நூல் ஆசிரியர் கருணாகரனும், நன்றி உரையினை ஆசிரியர் அ.பங்கையச்செல்வனும் நிகழ்த்தினர். (இ-3)

## கோபுரம் வெளிவந்தது

(யாழ்ப்பாணம்)

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் தகவல் வெளியீடான 'கோபுரத்தின்' ஆனிமாத இதழ் வெளிவந்துள்ளது. (உ-18)

## சிவாஜியின் நினைவு தினம்

(சில்லாலை)

மறைந்த நடிகர் சிவாஜிகணேசனின் இரண்டாம் ஆண்டு நினைவு தினம் கடந்த திங்கட்கிழமை சில்லாலை சாந்தை விநாயகர் முன்றலில் இடம்பெற்றது. (உ-58)

## ஓய்வு பெறும் வயதெல்லை நீடிப்பு

(கொழும்பு)

தோட்டத்தொழிலாளர்கள் ஓய்வு பெறும் வயதெல்லை 60ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

கண்டி ராஜகிரியாவில் உள்ள தொழில்வளமூல சம்மேளன அலுவலகத்தில் இதற்கான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இவ் ஒப்பந்தத்தின் அடிப்படையில் தோட்டத் தொழிலாளர்கள் ஓய்வு பெறும் வயதெல்லை 55இலிருந்து 60வரை உயர்த்தப்பட்டுள்ளது.

இவ்வயதெல்லை ஆண், பெண் இருபாலாருக்கும் பொருந்தும். (தி)

## உரிய இடத்தில் இயக்குக!

(வேலணை)

யுத்தத்தினால் சேதமடைந்து பறைகளால் மூடப்பட்டு இருக்கும் இலங்கை மின்சாரசபையின் தீவக அலுவலகங்கள், மற்றும் மின்சார சபையின் தீவக அலுவலக ஊழியர்களின்விடுதிகள் என்பனவற்றைப் புனரமைப்பதற்கு இதுவரை எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என தீவக மக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

தனியார் ஒருவரிற்குச் சொந்தமான காணியொன்றில் தற்காலிகமாக இயங்கிவரும் இவ் அலுவலகங்களை சொந்த இடத்தில் இயங்க வைக்க சம்பந்தப்பட்டவர்கள் உடன நடவடிக்கை எடுக்க வேண்டும் என தீவக மக்கள் சார்பில் கேட்கப்பட்டுள்ளது. (உ-47)

## இடமாற்றம்

(சுதுமலை)

வடக்குக் கிழக்கு மாகாணத்தில் உள்ள மாநகரசபைகள், பிரதேச சபைகள், நகரசபைகள் போன்றவற்றில் ஒப்பந்த அடிப்படையில் கடமை புரியும் உயர் அதிகாரிகளுக்கு விரைவில் இடமாற்றங்கள் வழங்கப்படுவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை வடக்கு - கிழக்கு மாகாண பொது நிர்வாக கூட்டுறவு வீதி அபிவிருத்தி அமைச்சும் பிரதம செயலாளர் அலுவலகமும் மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக சில உயர் அதிகாரிகள் குறிப்பிட்ட சில அலுவலகங்களில் மட்டும் கடமை புரிந்து வருவதும் வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் சித்தியெய்தாமல் இருந்து வருவதுமே இந்த நடைமுறைக்குக் காரணமாகும்.

இது தொடர்பான விபரங்கள் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள 72உள்ளூராட்சி மன்றங்களிலும் சேகரிக்கப்பட்டு வருகின்றன. (உ-252)

## தற்காலிக நியமனம்

(வட்டுக்கோட்டை)

கூட்டுறவுத்திணைக்களத்தில் கடந்த 97ஆம் ஆண்டு முதல் உத்தியோகப்பற்றற்ற கணக்காய்வாளராகக் கடமையாற்றிய 17 பேருக்கு முதல் ஒரு வருடத்திற்குத் தற்காலிக நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவால் இந்நியமனக்கடிதங்கள் கடந்த 22ஆம் திகதி யாழ். மாவட்ட கூட்டுறவுத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்படுள்ளன. இந்நியமனங்களைப் பெற்றவர்களில் 16பேர் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். மூவர் வன்னி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள்.

இதேவேளை, யாழ்.மாவட்டத்தைச சேர்ந்த 8 உத்தியோகப் பற்றற்ற கணக்காய்வாளர்களுக்கு இன்னமும்நியமனக் கடிதங்கள்வந்து சேரவில்லையென்றும், இவர்களுக்குரிய நியமனக்கடிதங்கள் தொடர்பாக கணக்காய்வாளர் சங்கப் பிரதிநிதி மாகாணப் பொதுச் சேவை அமைச்சின் செயலாளர் திருமதி கமலா சிவசிதம்பரத்துடன் தொடர்பு கொண்டதாகவும் விரைவில் இவர்களுக்கான கடிதங்கள் கிடைக்கும் என எதிர்பார்ப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.(உ-216)

## காப்புறுதி செய்வதில் கஷ்டங்கள்

(வேலணை)

கிளிநொச்சி மாவட்டம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள வாகன உரிமையாளர்கள் தங்களது வாகனங்களை காப்புறுதி செய்வதற்கு யாழ்ப்பாணத்திற்கோ, அன்றி வவுனியாவிற்கோ செல்ல வேண்டிய நிலை உள்ளது.

இதனால் மேற்படி வாகனச் சொந்தககாரர்கள் பல அசௌகரியங்களை அனுபவிக்கின்றனர்.

முன்பு கிளிநொச்சி நகரில் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் கிளையொன்று இயங்கி வந்ததும் யுத்தம் காரணமாக இது மூடப்பட்டுவிட்டதும் குறிப்பிடத் தக்கது. (உ-47)

## திருப்பணிக்கு நிதி

(யாழ்ப்பாணம்)

காரைநகர் திக்கரை முருகன் ஆலய கோபுரத்திருப் பணிகளுக்காக இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் 15இலட்சமு் ரூபாவை வழங்கியுள்ளார். (உ-18)

## வில்லூன்றியில் தீர்த்தம்

(யாழ்ப்பாணம்)

வில்லூன்றி தேவஸ்தானத்தில் ஆடிஅமாவாசை தினமான நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8.15மணிக்கு தீர்த்தோற்சவமும தர்பணாதி அனுஷ்டானங்களும் இடம்பெறவுள்ளன. (உ-18)

## உண்ணாவிரதம்

(புத்தளம்)

வடமேல் மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் புத்தளம் பேருந்து நேரக்கணிப்பாளர்களும் ஊழியர்களும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தாம் தொடர்ந்தும் பணி செய்ய ஆளும் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் ஆதரவாளர்கள் தடையாகவிருப்பதாகவும் இவர்களுக்கு எதிராக புத்தளம் மாவட்ட நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட தடையுத்தரவை நடைமுறைப் படுத்துவதில் பொலிஸார் அசிரத்தை காட்டிவருவதாகவும் தெரிவித்து இவற்றிற்கு எதிர்ப்புத்தெரிவிக்கும் வகையிலேயே கடந்த சில தினங்களாக இவ் உண்ணாவிரதம் இடம் பெற்று வருகின்றது. (உ-15)

## கிளி.மத்திய கல்லூரி தேசியப் பாடசாலையாகிறது

(வேலணை)

கிளிநொச்சி மாவட்டத்தின் முதலாவது தேசியப்பாடசாலையாக கிளிநொச்சி மத்திய கல்லூரி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இக் கல்லூரி ஜீ.சீ.ஈ.சாதாரண பரீட்சைகளிலும், உயர்தரப் பரீட்சைகளிலும் சிறந்த பெறுபேற்றைப் பெறுவதுடன், பல்கலைக்கழகத்தற்கும் அதிகளவு மாணவர்கள் தெரிவாவதும் குறிப்பிடத்தக்கது.(உ-47)

## சட்டவிரோத தொலைபேசி பாவனை அதிகரிப்பு

(கொழும்பு)

சட்டவிரோத வெளிநாட்டுத் தொலை பேசிப்பாவனையைத் தடுப்பதற்கு விசேட திட்டமொன்று அமுல் படுத்தப்படவுள்ளதாக தொலைத் தொடர்பு சீராக்கல் அணைக்குழு அறிவித்துள்ளது.

கடந்த மே மாதம் இது தொடர்பான விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

மக்கள் தொடர்பாடல் அமைச்சின் செயலாளர் தலைமையில் இதற்கென விசேட பிரிவொன்று அமைக்கப்பட்டுள்ளது. (தி)

## திருமலையில் பகிஷ்கரிப்பு

(திருகோணமலை)

திருகோணமலையில் படையினரின் அத்துமீறல்கள், அடாவடித்தனங்களைக் கண்டித்து பகிஷ்கரிப்புப் போராட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

திருகோணமலை மாவட்ட பொது ஜன அமைப்புக்களின் ஒன்றியம், இளைஞர் அணி உட்பட பல அமைப்புக்கள்ஒன்றிணைந்து இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றன.

அண்மைக் காலமாகப் படையினா திருகோணமலையில் தேவையற்ற சுற்றிவளைப்புக்கள், கைது நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர். சமாதானச் சூழலில் மேற்கொள்ளப்படும் இந் நடவடிக்கைகள் தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பாதித்துள்ளன. இவற்றைக் கண்டிக்கும் வகையிலேயே இப் போராட்டம் நடாத்தப்படவுள்ளது. (உ-8)

## இன்று ஒரு தகவல்

# ஜீவகாருண்யம்

ஒருவருக்குக் கத்தரிக்காய் பிடிக்கும் இன்னொருவருக்கு பூசணிக்காய் பிடிக்கும். ஒருவர் கோயிலுக்குப் போக விரும்புவார் வேறொருவர் பூங்காவுக்குப் போக விரும்புவார். இவ்வளவு ஏன்? எனக்குத்தெரிந்த ஒரு இணை பிரியாத தம்பதிகள். அவர் புடைவைக் கடைக்குப் போய் ஒரு புடைவை வாங்கிக்கொண்டுவந்தார். வழியில் பார்த்தேன். என்ன விஷயமென்று கேட்டேன். அதற்கு அவர் “ எங்களுக்கு இன்று திருமணநாள் அதற்குப் பரிசாக எனது மனைவிக்கு ஓர் புடைவை வாங்கிக்கொண்டு போகிறேன் எனக்குப் பிடித்த பச்சை நிறம் தீடீரென்று கொடுத்து அசத்தப் போகின்றேன்” என்று கூறிவிட்டு அவசரமாக ஓடினார். மனைவியை ஆச்சரியப் படுத்தினாரோ இல்லையோ என்னை ஆச்சரியப்படுத்தினார். ஆமாம்! எவ்வளவு வேகமாக ஓடினாரோ அவ்வளவு வேகமாகத் திரும்பி வந்தார். என்ன விஷயமென்று விசாரித்தேன். புடைவை நிறம் பிடிக்கவில்லையாம் அதனால் மாற்றிவிட்டு வரலாமென்று கடைக்குப் போகின்றேன் என்று கூறிவிட்டு ஓடினார்.

இதை ஏன் சொல்கிறேனென்றால் ஒருவர் மனது இன்னொருவர் மனது போல் இருப்பதில்லை. ஆனால் எல்லோருக்கும் ஒரேயொரு விஷயத்தில் மட்டும் ஒருமனது. அதாவது மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமென்று எல்லோரும் ஆசைப்படுகின்றனர். மனிதன் மட்டுமில்லை பறவை, விலங்கு எல்லாவற்றுக்குமே இதுவே அடிப் படை நோக்கம். நோக்கம் சரி ஆனால் எல்லோரும் மகிழ்வாக இருக்கின்றனரா? சதா கஷ்டப்படுவதாகத்தானே புலம்புகின்றனர். இதற்கு காரணம் என்ன வென்றால் வழிதெரியாததுதான் காரணம்.

என்ன விதைக்கின்றோமோ அதுதானே சார் விளையும். “பிறர்க்கு இன்னா முற்பகல் செய்யின் தமக்கு இன்னா பிற்பகல் தாமே வரும”

திருவள்ளுவர் சும்மா பயமுறுத்துவதற்காக இதைச் சொல்லி வைக்கவில்லை அது உண்மை. கருணை உள்ளம் வேண்டும் சார்.

குசேலரைப் பற்றி உங்களுக்குத்தெரியும். வறுமையில் வாடியவர் கண்ணனைப் பார்ப்பதற்காக துவாரகைக்குப் போய்க் கொண்டிருத்தார். அவந்தியிலிருத்து துவாரகை நீண்டதூரம் கடுமையான வெயிலில் நடத்து போய்க் கொண்டிருக்கின்றார். குடை இல்லை, செருப்பு இல்லை தெருவின் இருபக்கமும் நல்ல நிழல் தரும் மரங்கள் உள்ளன. ஆயினும் இவர் நிழலில் போக வில்லை வெயிலிலேயே போய்க்கொண்டிருக்கின்றார். மண் சுடுகின்றது காலை வைக்கமுடியாத அளவுக்கு சூடு இருந்தாலும் அவர் நிழலில் ஒதுங்காமல் நடுவீதியில் போய்க்கொண்டிருந்தார். என்ன காரணம் என்று நினைக்கின்றீர்கள்?

ஈ, எறும்பு, புழு போன்ற உயிரினங்கள் மரநிழலில் ஒதுங் கியிருக்குமாம். நாம் நிழலில் நடந்தால் அந்தப் புழு பூச்சிகள் மீது அடிப்பது போலாகிவிடும் என்று நினைத்து வெயிலில் நடந் தாராம்.

“ சீத நீழற் செலில் சிற்றுயிர்த்தொகை
போதச்சாம்பும் என்று எண்ணிய புத்தியான்
ஆதவன் தவழ் ஆறு நடந்திடை
காதல் அங்கை விரித்துக் கவித்தாரோ ”

இது குசேலோபாக்கியானம். எப்பேர்ப்பட்ட கருணை சங்க காலத் தலைவன் ஒருவன் வெளியூர் சென்று விட்டுத் திரும்பிவந்து கொண்டிருந்தான். தனது வீட்டிலுள்ள தன் தலைவியைப் பற்றியே யோசித்துக் கொண்டு மணிகள் பூட்டிய தேரில் வருகின்றான். வழியின் இருபக்கமும் பூஞ்செடிகள் ஏகப்பட்ட மலர்கள். அவற்றில் ஆண் வண்டு, பெண் வண்டு இவையெல்லாம் சோடியாக அமர்ந்து தேன் குடித்துக் கொண்டிருந்தன.

தலைவன் இதைப்பார்த்தான் தேரில் கட்டியுள்ள மணிகள் ஒலி எழுப்பிப் கொண்டிருக்கின்றன. இதைக்கேட்டால் தேன் உண்ணும் வண்டுகள் பயந்துவிடுமாம். அது அவ்வண்டுகளுக்கு இடைஞ் சலாக இருக்கும் என நினைத்தான். தேரை நிறுத்தினான் தேரிலுள்ள மணியின் நாக்குகளை அசையாதபடி கயிற்றால் கட்டி விட்டான். இனிச் சத்தம் கேட்காது. வண்டுகளுக்கு இடைஞ்சல் இல்லை என்று நிம்மதியுடன் தேரில் ஏறி தன் தலைவியைப் பார்க்கச் சென்றானாம். எப்பேர்ப்பட்ட கருணை பார்த்தீர்களா?

“பூத்த பொங்கர் துணையோடு வதிந்த
தாதுண் பறவை பேதுறல் அஞ்சி
மணி நாவார்த்த மாண் வினைத் தேரன்
உவக்காண் தோன்றும் ”

இது அகநானூறு. அதனால் கருணை என்பது மனிதர்களிடம் காட்டுவது மட்டுமல்ல; ஏனைய உயிரினங்களிடம் காட்டப்பட வேண்டியது.

சங்ககாலத் தலைவன் கதையை இந்த காலத் தலைவன் ஒருவரிடம் கூறினேன். குடும்பத்தலைவர் அவர் கூறுகின்றார் “ அந்த ஆள் தேர் மணியிலுள்ள நாக்குகளை கயிற்றால் கட்டிப் போட்டான். சத்தம் கேட்கக் கூடாது என்பதற்காக எனக்கு அந்த அளவுக்கு அவசியமில்லை. ஒரேயொரு நாக்கை கட்டிவிட்டால் போதும் சத்தமே இருக்காது ” என்றார் . யாரினது நாக்கை? என்றேன். “வம்பு வேன்டாம் சார்! வாழ்ந்தது வாழ்ந்து விட்டேன் மிகுதிக் காலத்தையும் இப்படியே கழித்து விடுகின்றேன் ”என்று கூறிவிட்டு ஓடிப்போய் விட்டார்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# நிதியமைச்சரின் சிபார்சுகளை ஜனாதிபதி நிராகரித்தார்



(கொழும்பு)

சீடிள்ஸ் நிறுவனத்திற்கு 2000ஆம ஆண்டு சுங்கத்திணைக்களத்தி னால் விதிக்கப்பட்ட தண்டப்பண மான சுமார் 8லட்சம் ரூபாவை மீளளிப்புச் செய்யும்போது அதன் ஒரு பகுதியை சுங்க அதிகாரிகளி டமிருந்தும் அறவிடவேண்டும் என்று ஜனாதிபதி குமாரதுங்க சுட்டிக்காட் டியுள்ளார்.

மேற்படி கம்பனியிடமிருந்து அற விடப்பட்ட தண்டப்பணத்தின் ஒரு பகுதி சுங்க அதிகாரிகளுக்கு வெகுமதியாக வழங்கப்பட்டிருந் தது. இது தொடர்பில் நிதியமைச்சர் கே.என். சொக்ஸி செய்திருந்த சிபார் சுகளை ஜனாதிபதி குமாரதுங்க நிராகரித்துள்ளார்.

சீடிள்ஸ் நிறுவனம் சோனிமினி ஹய்பை உதிரிப்பாகங்களை இறக் குமதி செய்திருந்தது குறித்து பொருட் களின் இறக்குமதி சுங்கத்திணைக் களத்தின் விதிகள் சிலவற்றையும், 1979ஆம் ஆண்டின் புலமைச்சொத்து சட்டத்தின் 29வது பிரமாணத்தை யும் மீறிவிட்டதாகத் தெரிவித்த சுங் கத்திணைக்களம், சீடிள்ஸ் நிறு வனத்திற்குத் தண்டப்பணமாக 8லட் சத்து 29ஆயிரத்து 170ரூபா 56சதத்தை விதித்தது. நிறுவனம் தண்டப் பணத்தை செலுத்தி பொருட்களை சுங்கத்திணைக்களத்திடமிருந்து பெற்றுச் சென்றது.

ஆயினும், தனக்கு தண்டப் பணம் விதித்தது அநீதியானது என சுட்டிக்காட்டி நிறுவனம் நிதியமைச் சருக்கு மேன்முறையீடு செய்தது. இதனை ஆராய்ந்த நிதியமைச்சர் சொக்ஸி, தவறாக வசூலிக்கப்பட்ட தண்டப்பணத்தை சீடிள்ஸ் நிறுவ னத்திற்கு திருப்பிச் செலுத்தவதற்கு அமைச்சரவை அங்கீகாரத்தை கோரியிருந்தார்.

அத்துடன், சுங்க அதிகாரிகளுக்கு மேற்படி தண்டப்பணத்திலிருந்து வெகுமதியாக வழங்கப்பட்ட தொகையை



மீளப்பெறமுடியாதபடி பல சுங்க அதி காரிகள் ஓய்வு பெற்றுச் சென்றி ருப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

சங்கத்திணைக்கள விதிகளை மீறி நிறுவனம் பொருட்களை இறக் குமதி செய்ததை கண்டுபிடித்த சுங்க அதிகாரிகள், தகவல் தந் தோருக்கு தண்டப்பணத்திலிருந்து 5இலட்சத்து 80ஆயிரத்து419ரூபா 39சதம் வெகுமதியாக வழங்கப் பட்டிருந்தது. இத்தொகையை சுங்க அதிகாரிகளின் நிதியத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அரச நிதியிலிருந்து பெறக்கூடா தென்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டி யுள்ளார். (உ)

# வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தனித்தனியாக இயங்க வேண்டும்

## மீண்டும் வலியுறுத்துகிறார் அமைச்சர் அதாவுல்லா

(கொழும்பு)

அரசினால் தற்போது மேற்கொள் ளப்பட்டுவரும் சமாதான முயற்சி கள் இந்நாட்டில் வாழுகின்ற மூவின மக்களின் கௌரவத்தையும், பாது காப்பையும் உறுதி செய்ய வேண்டு மென்றும் அமைச்சர் அதாவுல்லா வலியுறுத்திக்கூறியுள்ளார்.

தமிழ் தேசிய சேவையில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற உரையாடல் ஒன்றிலேயே அமைச் சர் அதாவுல்லா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவ்வுரையாடலின் போது அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

அரசாங்கம் தற்போது மேற் கொண்டு வரும் சமாதான முயற் சிகளுக்கு எனது முழுமையான ஆதரவு எப்போதும் உண்டு. வடக்குக் கிழக்கு மாகாணங்களின் நிர்வா கத்தில் இரண்டு நிர்வாக அலகு களை ஏற்படுத்தவேண்டும் என்ற எனது கோரிக்கை எந்தவகையிலும் சமாதான முயற்சிகளுக்கு குந்த மாக இருக்க மாட்டாது.

இடைக்கால நிர்வாக சபை ஒன்றை அமைக்கவிருக்கும் இக் காலகட்டத்தில் வடக்குக்கிழக்கு மாகாணங்கள் இரண்டும் தனித் தனியாக செயற்படுவதே அர்த்த முடையதாக இருக்கும் என்று கூறிய அமைச்சர் அதாவுல்லா இரண்டு மாகாணங்களும் பிரிந்து இருக்க வேண்டுமென்ற கோரிக்கையை மீளய்வு செய்ய நான் தயாராக உள்ளேன் என்றும் கூறினார். (வ)

## இராசி பலன்

**26.07. 2003**

**(ஆடி 10, சனி)**

துவாதசி - மு.ப. 10.53 வரை
மிருகசீரிடம்- மாலை. 6.43 வரை
இராகுகாலம்- 9.02-10.32
சுபநேரம்- 3.02-4.32
சனிப்பிரதோஷ விரதம்

**மேடம்**
நற்கீர்த்தி, தடைப்பட்ட காரியம் கைகூடும், மனோ தைரியம், தொழில் சிறப்பு.

**இடபம்**
நல்ல பிரயாசை, எந்தக் காரியத்திலும் தாமதம், போசண சுகக்குறைவு, மாதர் நட்பு.

**மிதுனம்**
சிந்தனை மிகுதி, வெகுமானம், நல்ல வரவேற்பு, காரிய சிந்தை.

**கடகம்**
உஷ்ண வியாதி, சோம்பல் நிலை, தன்னம்பிக்கை குறைவு, முயற்சி தாமதம்.

**சிங்கம்**
எடுத்த காரியம் கைகூடும், மனமகிழ்ச்சி, வருமானம் அதிகரிக்கும், உறவினர் வருகை.

**கன்னி**
இடமாற்றம், நன்கொடை, இஷ்ட சித்தி, தொழில் விருத்தி.

**துலாம்**
புதிய முயற்சி, திடீர் நன்மை, வீண்செலவு, உத்தியோக பலிதம்.

**விருச்சிகம்**
பிறருக்கு உதவுதல், துயரமான நிலை, அபகீர்த்தி, முயற்சி தடங்கல்.

**தனுசு**
தேக சௌக்கியம், காரிய சித்தை, விருந்துபசாரம், வாகன சுகம்.

**மகரம்**
சத்துரு ஜெயம், உறவினர் சந்திப்பு, தொழில் முன்னேற்றம், புதிய சிந்தை.

**கும்பம்**
தாழ்ந்த சுபாவம், சொத்துக்களால் கவலை, பெரியோரால் மதிக்கப்படல், ரோக பயம்.

**மீனம்**
தன்னம்பிக்கை குறைவு, வேலையில் ஆர்வம், முயற்சி தாமதம், பிரயாணம்.
(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்

## ரயில்வே திணைக்களத்தை

# அதிகார சபையாக மாற்றுவதற்கு எதிர்க்கட்சிகள் ஆட்சேபம்

(கொழும்பு)

ரயில்வேத் திணைக்களத்தை அதிகார சபையாக மாற்றும் அரசாங் கத்தின் திட்டத்துக்கு எதிர்கட்சிகள் ஆட்சேபம் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக நேற்று முன்தினம பாராளுமன்றத்தில் விசேட உரை யாற்றிய எதிர்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஷ,

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் இத்திட்டத்தை தற்காலி கமாகவேனும் இரத்துச் செய்ய வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளார்.

10வருடங்களுக்கு அங்கீரிக் கப்பட்ட சட்டத்தை தற்போது அமுல் படுத்துவது பொருத்தமானதல்ல.

இம் முயற்சிகள் பொதுமக்களின் அன்றாட வாழ்க்கையைப்பாதிக் கும். திணைக்கள ஊழியர்களுக்கு அறிவிக்காமல் அதிகார சபையாக மாற்றும் தீர்மானத்தின் பின்னணி யில் அரசியல் நோக்கங்கள் மறைந் திருக்கின்றன.

இலங்கையின் பழமையான திணைக்களமொன்றில் நிர்வாக மாற் றம் ஏற்படுத்துவதற்கு முன்னர் விரி வான கலந்துரையாடல் நடத்தப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித் துள்ளார். (தி)

# ரசாத் எம். பியின் கோரிக்கைக்கு கல்வி அமைச்சர் சாதகமான பதில்

(புத்தளம்)

வடமாகாணத்திலிருந்து இடம் பெயர்ந்துள்ள படித்த இளைஞர், யுவதிகளில் 350பேருக்கு உலக வங்கியின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் ஆசிரிய நியமனங்களைப் பெற்றுக் கொடுக்குமாறு வன்னி மாவட்டப் பாராளமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீன் விடுத்த வேண்டுகோளுக்கு, கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு சாதகமான பதிலை அளித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஆளும்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களின் குழுக்கூட்டம் பிரதமர் ரணில் விக்கிர மசிங்க தலைமையில் பாராளு மன்ற கட்டடத்தில் நடைபெற்றபோது, பாராளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீன், தமது வேண்டுகோளை பிரதம ரிடம் பிரஸ்தாபித்தார்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் 2ஆயிரம் ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படுவதாகவும், அந்நிய மனை பட்டியலில் வடமாகாணத்திலிருந்து இடம் பெயர்ந்து புத்தளம், குருநா கல், அநுராதபுரம் மாவட் டங்களில் தற்காலிக முகாம்களில் வசிக்கும் படித்த இளைஞர், யுவதிகள் சேர்த்துக் கொள் ளப்படவில்லை என்பதையும் சுட்டிக் காட்டியதையடுத்து பிரதமர் ரணில விக்ரமசிங்க, கல்வி அமைச்சருக்கு உலக வங்கிப்பிரதி நிதிகளுடன சந்திப் பொன்றை நடத்துமாறும் பணிப் புரை விடுத்திருந்தார். (உ-15)

## பணி நீக்கம் செய்யப்பட்ட

# அரச ஊழியர்களுக்கு மீண்டும் வேலை வழங்க தமிழ் நாடு அரசு உச்சநீதி மன்றில் சம்மதம்

### வன்செயலில் ஈடுபட்டவர்களின் நிலை கேள்விக்குறியில்

(சென்னை)

தமிழ்நாட்டில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு பணி நீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களில் ஒரு லட்சத்து 76 ஆயிரம் பேரை மீண்டும் பணியில் சேர்த்துக்கொள்வதாக தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்திடம உறுதியளித்துள்ளது.

வேலைநிறுத்தத்தின்போது வன்முறையில் ஈடுபட்டு வழக்குகளை எதிர்நோக்கியுள்ள சுமார் 2 ஆயிரத்து 200 பேரை மீண்டும் எடுக்க முடியாது என்றும் தமிழ் நாடு அரசு தெரிவித்துள்ளது.

வேலையிலிருந்து நீக்கப்பட்டு மீண்டும் பணியில் சேர்த்துக்கொள்ளப்படாத ஊழியர்கள் மேன்முறையீடு செய்யவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 2ஆம் திகதி முதல் தமிழகத்தின் அரச ஊழியர்கள் வேலை நிறுத்தம் மேற்கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஊழியர்கள் பணிக்காலத்தில் மாற்றமெதுவும் மேற்கொள்ளாது அவர்களுக்குரிய சம்பளத்தை தமிழக அரசு வழங்க வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

எதிர்காலத்தில் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடமாட்டோம் எனவும் ஒழுங்கு விதிகளைப் பேணி நடப்போம் என்றும் அரச ஊழியர்களிடம் உறுதி மொழி பெற்றுக்கொள்ள முடியும் என்றும் நீதிமன்றம் ஆலோசனை வழங்கியுள்ளது. (பி-9)

## சாதனை படைத்த பெண்



கடலுக்கடியில் 400 அடி ஆழம்வரை மூச்சடக்கி மூழ்கி சாதனை படைத்த தானியா ஸ்ட்ரீட்டர் என்ற பெண்மணி கடலுக்கடியில் இருந்து வெளியில் வரும் காட்சி. யூலை 21ஆம் திகதி துருக்கியில் கயிகொஸ் தீவுகளுக்கருகில் இச்சாதனை நிகழ்த்தப்பட்டது. 3 நிமிடம் 58 விநாடிகளில் அவர் வெளியில் வந்தார். ஏற்கனவே ஆண்களால் நிகழ்த்தப்பட்டிருந்த சாதனையை இவர் முறியடித்தார்.

## —30 லட்சம் வெளிநாட்டவர்களுக்கு—

# வேலை வழங்க யு.எஸ் நிறுவனங்கள் திட்டம்

(நியூயோர்க்)

இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 30 லட்சம் பேருக்கு 2015ஆம் ஆண்டுக்குள் வேலை வழங்க அமெரிக்காவின் மிகப் பெரிய நிறுவனங்கள் திட்டமிட்டுள்ளன.

இத்தகவலை உயர் தொழில்நுட்ப ஆலோசனைக் குழுமமான பாரஸ்டர் ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டவருக்கு வழங்கத் திட்டமிட்டுள்ள வேலையில் மிக அதிக ஊதியம் பெறும் நிர்வாகப் பணிகளும் அடங்கும். இந்த ஆண்டு வெளிநாட்டவர் 4 லட்சம் பேருக்கு வேலை வழங்க பெரிய நிறுவனங்கள் திட்டமிட்டுள்ளன என்றும் அந்த ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அடுத்த 12 ஆண்டுகளில் வெளிநாடுகளைச் சேர்ந்த 4,50,000 பேருக்கு கணனி தொடர்பான பணிகளை அமெரிக்க நிறுவனங்கள் வழங்கக் கூடும் என்று அந்த ஆராய்ச்சி நிறுவனம் மதிப்பிட்டுள்ளது. 'நியூயோர்க் டைம்ஸ்' இச்செய்தியை வெளியிட்டுள்ளது. (பி)

## பிலிப்பைன்சில் புயல்; 10 பேர் கொல்லப்பட்டனர்

(மணிலா)

பிலிப்பைன்சைத் தாக்கிய மிக மோசமான புயலினால் 10 பேர் கொல்லப்பட்டதுடன், 20 பேர் வரை காயமடைந்துள்ளனர். தற்போது சீனாவின் தென்பகுதியைத் தாக்கியிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தப் புயல் காரணமாக ஹொங்கொங் நகரில் 11 பேர் காயமடைந்துள்ள அதேவேளை, வீடுகள், கட்டடங்களுக்கு கடுமையான சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

185 கிலோ மீற்றர் வேகத்தில் சீனாவின் குவாங்டன் மாநிலத்தை தாக்கிய புயல் அங்கிருந்து விலகி பின்னர் ஹொங்கொங்கை தாக்கி இருக்கின்றது.

ஹொங்கொங்கில் இதற்கு முன்னர் 1996ஆம் ஆண்டு வீசிய மோசமான புயலின் பின்னர் இம்முறையே கடுமையான புயல் அங்கு வீசியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

1996ஆம் ஆண்டு ஹொங்கொங்கைத் தாக்கிய புயலினால் 123 பேர் கொல்லப்பட்டு 4 ஆயிரத்து 3 பேர் காயமடைந்தனர்.

கடந்த செவ்வாயன்று பிலிப்பைன்சை தாக்கிய இம்புடு என்று அழைக்கப்படும் இந்தப் புயலினால் 10 பேர் கொல்லப்பட்டதுடன் மேலும் 20 பேர் வரையில் காயமடைந்தமையும் குறிப்பிடத்தக்கது. (பி-9)


## மேலும் 20 பாக். குழந்தைகளுக்கு இந்தியாவில் இலவச சிகிச்சை

(புதுடில்லி)

பாகிஸ்தானில் இருந்துவரும் மேலும் 20 குழந்தைகளுக்கு இலவசமாக சிகிச்சை அளிக்க இந்திய அரசு முடிவு செய்துள்ளது.

பாகிஸ்தானிற்கும் இந்தியாவிற்குமிடையில் பஸ் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டதையடுத்து பாகிஸ்தானியச் சிறுமி நூர்பாத்திமாவுக்கு பெங்களூர் வைத்தியசாலையில் இதய அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக நிகழ்த்தப்பட்டு அவர் சுகமாகி வருகிறார்.

இதையறிந்த மேலும் பல பாகிஸ்தானியர்கள் இதய நோயால் பாதிக்கப்பட்டுள்ள தமது குழந்தைகளை இந்தியாவிற்கு கொண்டு வந்து சிகிச்சை பெற விரும்புகிறார்கள். இதனால் மனிதாபிமான அடிப்படையிலும் நல்லெண்ண முறையிலும் பாகிஸ்தானில் இருந்துவரும் 20 குழந்தைகளின் சிகிச்சைச் செலவை இந்திய அரசே ஏற்றுக்கொள்வதென முடிவு செய்துள்ளது. (பி)



உலக அதிசயங்களில் ஒன்றான பரிஸில் உள்ள ஈஃபிள் கோபுர உச்சியில் மின்சார கசிவு ஏற்பட்டு தீ விபத்து ஏற்பட்டது. உடனடியாக தீயணைப்புத் துறையினர் விரைந்து வந்து அதனை சரி செய்தனர். கோபுரத்தில் இருந்து புகை வெளியேறும் காட்சி.

### உலக தரிசனம்

#### ஒட்டிப் பிறந்த குழந்தைகள் மரணம்

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் பிறந்து 2 வாரங்களேயான இரட்டைக்குழந்தைகள் வியாழக்கிழமை காலை மருத்துவமனையில் இறந்தன.

அவர்களது இறப்புக்கான காரணத்தை உடனடியாக அறிய முடியவில்லை என டாக்டர் சைருல் இஸ்மாயில் தெரிவித்தார்.

இக்குழந்தைகளுக்கு தனித்தனியே தலை, மார்பும் உள்ளன. வயிற்றுப்பகுதி மட்டும் ஒட்டியுள்ளது. இக்குழந்தைகளுக்கு ஆசனவாய் இல்லை என்று டாக்டர்கள் தெரிவித்தனர். (பி)

#### படங்கள் வெளியாகின

(பக்தாத்)

அமெரிக்கப் படைகளால் மொசூல் நகரில் கொல்லப்பட்ட ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைனின் இரு புதல்வர்களின் படங்களையும் அமெரிக்க அதிகாரிகள் வெளியிட்டுள்ளனர்.

சதாமின் புதல்வர்கள் கொல்லப்பட்டு விட்டார்கள் என்பதை ஈராக்கிய மக்களுக்கு உறுதிப்படுத்துவதற்காகவே இந்தப் படங்கள் வெளியிடப்பட்டுள்ளன. (பி)

## 6 நீர்மூழ்கிப் போர்க்கப்பல்களை பிரான்ஸ் இந்தியாவிற்கு வழங்கும்

(புதுடில்லி)

இந்தியாவிற்கு 6 நீர்மூழ்கிப் போர்க் கப்பல்களை வழங்குவதற்கு பிரான்ஸ் முன்வந்துள்ளது. சென்னைக்கு வந்துள்ள இந்தியாவிற்கான பிரான்ஸ் தூதுவர் டொமினிக் ஜெராட் இத்தகவலை வெளியிட்டார்.

இந்த நீர்மூழ்கிப் போர்க்கப்பலுக்கான தொழில்நுட்பம் இந்தியாவிற்கு வழங்கப்பட்டு இந்தியாவிலேயே பணிகள் நடைபெற இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பிரான்ஸின் நீர்மூழ்கிப் போர்க் கப்பல்கள் அதிக சக்தி வாய்ந்தவை என்பதோடு அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்களிற்கு அடுத்த நிலையில் இவை இருக்கின்றன.

பிரான்ஸிடம் இருந்து 43 பயணிகள் விமானங்கள் மற்றும் மிராஜ் ரக போர் விமானங்களைக் கொள்வனவு செய்வதற்கான பேச்சுவார்த்தைகளிலும் இந்தியா ஈடுபட்டு வருகின்றது.

ரஷ்யா, இஸ்ரேல் போன்ற நாடுகளுக்கு அடுத்த படியாக இந்தியாவிற்கு அதிக ஆயுதத் தளபாடங்களை வழங்கும் நாடாக பிரான்ஸ் காணப்படுகின்றது. (பி-9)

## நியூயோர்க்கில் நகரசபை உறுப்பினர் சுட்டுக்கொலை

(வாஷிங்டன்)

நியூயோர்க் மாநகர சபை புரூக்லின் பகுதி உறுப்பினர் சுட்டுக் கொல்லப்பட்டார். மாநகர சபையின் வழமையான கூட்டம் நடைபெறவிருந்த வேளையில் நகரில் இடம்பெறும் வன்செயல்களுக்கு எதிராக பிரசாரம் செய்துவரும் உறுப்பினரான ஜேம்ஸ் டேவிட் சுட்டுக்கொல்லப்பட்டார்.

உறுப்பினரைச் சுட்ட நபர் அவரின் உடலின் மீது ஏறிநின்று பார்வையாளர்கள் பகுதியை நோக்கி குண்டுகளைத் தீர்த்துக்கொண்டிருக்கையில் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சம்பவம் இடம்பெற்ற வேளை நகர மேஜர் மைக்கேல் புளும்பேர்க் தமது அலுவலக அறையில் இருந்தார். ஆனால் காயப்படவில்லை. இச்சம்பவம் அரசியல் போட்டியினால் ஏற்பட்டது. பயங்கரவாதம் அல்ல என்று மேஜர் கூறினார்.

உறுப்பினரின் விருந்தினர் போல் காட்டிக்கொண்டு துப்பாக்கிதாரி உள்ளே நுழைந்துள்ளார். அதனால் உலோகங்களைக் கண்டு பிடிக்கும் பகுதிகளை இலகுவாகக் கடந்து சென்றுள்ளார்.

எதிர்வரும் சபைத் தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிடவிருந்த 31 வயதான ஓத்னியல் அஸ்கியு என்பவரே அவர் என்று கூறப்படுகின்றது. (பி)



அமெரிக்கப்படைகளால் கொல்லப்பட்ட சதாம் ஹுசைனின் புதல்வர்களில் ஒருவரின் படம், அமெரிக்க அதிகாரிகளால் வெளியிடப்பட்டுள்ளது.

## உகண்டாவில் படகு கவிழ்ந்து 20 பயணிகள் மரணம்

(கம்பாலா)

மேற்கு உகண்டாவில் இடம்பெற்ற படகு விபத்து ஒன்றில் 20 பேர் உயிரிழந்திருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

ஜபேட் எனப்படும் வாவியூடாகப் பயணம் செய்த மோட்டார் இயந்திரங்கள் பொருத்தப்பட்ட இரண்டு படகுகள் மோசமான காலநிலை காரணமாக விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக படகில் பயணம் செய்த 20 பேர் நீரில் மூழ்கி இறந்ததாகவும், ஏனையோரைப் பொலிஸார் காப்பாற்றியிருப்பதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

படகுகள் அளவுக்கதிகமாக பயணிகளை ஏற்றிச் செல்வதனால் இவ்வாறு அடிக்கடி விபத்துக்கள் இடம்பெறுவதுடன், உயிர்ச் சேதங்கள் ஏற்படுவதாகவும் உகண்டாப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (பி-9)

பெரியாரைப் பேணாது ஒழுகின் பெரியாரால்
பேரா இடும்பை தரும்
– குறள்

# வலம்புரி

## முரண்பாடு ஏன்?

இடைக் கால நிர்வாக சபையை ஏற்படுத்துவதில் அரசு காட்டிய தயக்கம் சமாதான முயற்சிகளில ஓர் தேக்க நிலையை ஏற்படுத்தியிருந்தது. இதனால், இடைக்கால சபையை அமைக்க வேண்டிய ஓர் கட்டாய தேவை அரசுக்கு ஏற்பட்டதன் நிமிர்த்தம், அதற்கான திட்ட வரைபு அரசினால் தயாரிக்கப்பட்டு விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

தேக்க நிலை அடைந்துள்ள சமாதான முயற்சியை மீண்டும் ஆரம்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட இடைக் கால நிர்வாக சபைத் திட்டவரைபே இப்போது சிக்கலை எதிர் நோக்கியுள்ளது.

ஆம், விடுதலைப் புலிகளுக்கும்,ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கும் அரசினால் அனுப்பப்பட்ட இடைக் காலசபைத் திட்ட வரைபில், பல்வேறு முரண்பாடுகள் இருப்பதாகவும், புலிகளுக்கு அனுப்பப்பட்ட திட்டவரைபில் உள்ள பல விடயங்கள் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட திட்டவரைபில் இடம் பெறவில்லையெனவும் ஜனாதிபதியின் ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமர் குற்றம் சாட்டியுள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கும் ஜனாதிபதிக்கும் அனுப்பப்பட்ட திட்டவரைபு அடிப்படையில் ஒன்றுஎன அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.அமைச்சர் பீரிஸின் கருத்து ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட திட்ட வரைபில் சில விடயங்கள் விடுவிக்கப்பட்டுள்ளன என்பது தெளிவாகிறது.

ஜனாதிபதியைப் பொறுத்தவரை விரும்பியோ, விரும்பாமலோ அவர் இந்த நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட தலைவியாக விளங்குகின்றார். அதேவேளை விடுதலைப் புலிகளிடம் வழங்கப்படவிருக்கும் இடைக்கால நிர்வாக சபை என்பது இரகசியமானதொரு விடயமல்ல.அது தமிழர்களுக்குக் கிடைக்க வேண்டிய ஆகக் குறைந்த பட்ச உரிமை.அதாவது இடைக்கால சபை என்பது இனப்பிரச்சினைக்கான தீர்வன்று. அது, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடர்வதற்கான ஓர் ஏற்பாடு.

எனவே, இந் நிலையில் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பப்பட்ட இடைக்கால சபைத் திட்டவரைபையே ஜனாதிபதிக்கும் அனுப்பாமல் விட வேண்டிய தேவை அரசுக்கு ஏன் ஏற்பட்டதென்ற கேள்வி இப்போது பலரையும் திண்டாடவைக்கின்றது.

விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைத்த அதே திட்ட வரைபை ஜனாதிபதிக்கும் அனுப்புவது அரசின் கடமை மட்டுமன்றி நேர்மைத் தன்மைக்கும் தேவையானதொன்றாகும்.

திட்டவரைபில் உள்ள அதிகாரங்களை ஜனாதிபதி குறைத்துவிடுவார் என அரசு அச்சம் கொள்ளுமாயின் அது பெரும் தவறாகும் ஏனெனில் விடுதலைப் புலிகளின் பலத்தை ஜனாதிபதி நன்கு அறிந்து வைத்துள்ளார்.

# வடகிழக்கில் இடைக்கால நிர்வாகம் அவசியம் இடதுசாரிக் கட்சிகள் கூட்டாக வலியுறுத்து

(கொழும்பு)

நீண்டகால இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் வரை வடக்கு கிழக்கு மாகாணத்தில் இடைக்கால நிர்வாக சபை அமைப்பு ஏற்படுவது அவசியம் என இடதுசாரிக் கட்சிகள் கூட்டாக வலியுறுத்தியுள்ளன.

''இடைக்கால நிர்வாகமும் இடதுசாரிக் கட்சிகளின் பொறுப்பும்'' என்ற தலைப்பிலான கருத்தரங்கொன்று கண்டி பி.எஸ் சேனநாயக்க நூல் நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோதே இடது சாரிக்கட்சிகள் இதனை வலியுறுத்தியுள்ளன.

அக்கருத்தரங்கில் கடத்த 20 ஆண்டுகளாக நடைபெற்றுவந்த போருக்கு குறுகிய காலத்தில் சமாதானத் தீர்வு ஏற்படுவது சாத்தியமற்ற விடயமாகும் எனவும் தெரிவித்துள்ளார்.

கருத்தரங்கில் லங்கா சமசமாஜக்கட்சியின் உறுப்பினரும், மத்திய மாகாண சபை அங்கத்தவருமான லால் விஜயநாயக்கா கருத்து தெரிவிக்கையில்,

இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண நீண்டகாலம் எடுக்கும். எனவே, போர் அனர்த்தங்களால் பாதிககப்பட்ட பிரதேசங்களில் அரசியல், மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்கு இடைக்கால நிர்வாக சபை அமைப்பு, சிறந்த குறுகிய காலத்தீர்வாக அமையும்.

நிரந்தர சமாதானத்தை அடைய வேண்டும் என்ற மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்ய அனைத்து அரசியல் கட்சிகளும் பேதமற்ற வகையில் ஒன்று படவேண்டும்.

ஏனைய கட்சிகளும் அறிந்து கொள்ளும் வகையில் ஐக்கிய தேசிய முன்னனி அரசாங்கம் சமாதான முயற்சிகளை வெளிப்படையாக மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

ஸ்ரீலங்கா கொம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் எஸ்.கூபசிங்க உரையாற்றுகையில்,

வடக்கு கிழக்குப் பகுதிகளில் அமைக்கப்படவுள்ள இடைக்கால நிர்வாக சபை. அமைப்பு தமிழீழ விடுதலை புலிகளுக்கு மட்டும் உரியதாக அமையாது, அப்பகுதிகளின் ஏனைய அரசியல் கட்சிகளுக்கும் உரியதாக அமைக்கப்பட வேண்டும் என்றார்.

ஜனநாயக இடதுசாரி முன்னணியின் பொதுச் செயலாளர் கே.சி. விக்கிரமசிங்க கருத்துத் தெரிவிக்கையில், இடைக்கால நிர்வாக சபையை வட கிழக்கில் அமைப்பதன் மூலம் தனி நாடு உருவாக வாய்ப்பில்லை. நிரந்தர அரசியல் தீர்வு கிட்டும் வரை வடக்கு கிழக்கு அரசியல் நிர்வாக அதிகாரம் அப்பகுதிகளின் ஏனைய குழுக்களுக்கும் உரியது என தெரிவித்துள்ளார்.(தி)

# குடாநாட்டு கடல் உணவுக்கு தெற்கில் நல்ல வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டு கடல் உணவு வகைகளுக்கு தெறகில் மிகுந்த வரவேற்பு இருப்பதால் தொடர்ந்து இக் கடலுணவு வகைகன்ள ஏற்றுமதி செய்ய தீர்மானித்திருப்பதாக வடமாகாண கடற்றொழிலாளர் சங்க தலைவர் தவரட்ணம் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் இவ்ஏற்றுமதி செயறபாட்டுக்கான முன்னோடி நட்வடிக்கையாக 1000 கி.கி. இறால், நண்டு, கணவாய் போன்ற கடலுணவுகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதால் அதற்கு மிகுந்த வரவேற்பு தென் பகுதியில் இருப்பதால் அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப் போவதாக தெரிவித்த அவர் எதிர்வரும் மாதம் 11ஆம் திகதியில் இருந்து கடல் உணவு அனுப்பிவைக்கும் வேலைகள் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

இதனால் கடல் நீரேரிகளில் கிடைக்கக்கூடிய இக் கடலுணவுகளை சிறந்த முறையில் சந்தைப் படுத்த வசதியின்மையால் பாதிக்கப்பட்ட சிறு கடல்தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் மேம்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (பி-4)

# பாராளுமன்ற விவகாரங்களை பேதமின்றி வெளியிட வேண்டும்

## ஜோர்ஜ் பெர்ணான்டோபுள்ளே கோரிக்கை

(கொழும்பு)

பாராளுமன்ற விவகாரங்களைக் கட்சி பேதமின்றி வெளியிடுவதற்கு அரச ஊடகங்களுக்கு ஆலோசனை வழங்கவேண்டும் என பொது ஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயராஜ் பெர்ணான்டோபுள்ளே சபாநாயகர் யோசப் மைக்கல் பெரேராவைக் கேட்டுள்ளார்.

பாராளுமன்றம் நேற்றுக் காலை அதன நடவடிக்கைகளுக்காக கூடிய போதே அவர் இவ்வேண்டுகோளினை விடுத்துள்ளார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், நேற்று முன்தினம் நடைபெற்ற பாராளுமன்ற நடவடிக்கைகளை சக்தி, சிரச உட்பட சில ஊடகஙகளே செய்தி வெளியிட்டுள்ளன.

ஆயினும், அரச ஊடகங்கள் ஒருபக்க சார்பாக செயற்பட்டதாகவும், இது எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பாதகத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (தி)

## தொடர்பு கொள்க

(யாழ்ப்பாணம்)

கீழே பெயர் குறிப்பிட்டவர்களை செஞ்சிலுவைச்சர்வதேசக்குழுவுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

திருமதி பரம்சோதி உதயா - உடுவல் கிராம சபை அகதிகள் முகாம், மருதனார்மடம், சுன்னாகம். திருமதி யூட் மரியபீறிடா - கற்குளம் வீதி, நாவாந்துறை (கொட்டடி). திருமதி அருளப்பு மேரி அனிற்றா- எவ் - 9 குருநகர் தொடர்மாடி. திருமதி செல்வம் குணம் - 5 புதிய வீடமைப்புத் திட்டம், குருநகர். திருமதி நடராஜா லூர்த்தம்மா - இணுவில் கிழக்கு, திருமதி கந்தையா சின்னப்பிள்ளை - சுன்னாகம் தெற்கு. (உ)

# கட்டாக்காலி நாய்களை பிடித்தழிக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் காணப்படும் கட்டாக்காலி நாய்களைப் பிடித்தழிப்பதற்கு நாய்கள் பதிவுக் கட்டளைச் சட்டம் அத்தியாயம் 574 இன் கீழுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி அவற்றினைப் பிடித்தழிக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே, வளர்ப்பு நாய்களைக் கட்டி வளர்க்கும் படியும், அவற்றுக்கான வருடாந்த உரிமத் தகட்டினை பெற்று உரிய காலத்தில் தடுப்பூசிகளை ஏற்றும் படியும், கட்டாக்காலி நாய்களைப் பிடித்தழிக்கும் நடவடிக்கைக்கு முழுமையான ஒத்துழைப்பினை வழங்குமாறும் சம்பந்தப்பட்ட பொதுமக்கள் அனைவரையும் யாழ். மாநகர ஆணையாளர் இ. இராமலிங்கம் கேட்டுள்ளார். (உ)

# ரயில்வே ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் குதிப்பு

(கொழும்பு)

ரயில்வே திணைக்களத்தின் 52 தொழிற்சங்க ஊழியர்களும் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் வேலை நிறுத்த போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

ரயில்வே திணைக்களம் அதிகாரசபையாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது என்ற அரச வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்யக் கோரியே இவ் வேலை நிறுத்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அரசின் இந்நடவடிக்கை திணைக்களத்தை தனியார் மயப்படுத்தும் திட்டத்தின் ஒருபடி என, ரயில்வே ஊழியர்களின் உரிமைகளையும், சொத்துக்களையும் பாதுகாக்கும் அமைப்புத் தெரிவித்துள்ளது.

ரயில்வே ஊழியர்களின் இவ் வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக நேற்றுக்காலை முதல் ரயில்வே சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

(தி)

# பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பளிக்க பிரதமர் பணிப்பு

(கொழும்பு)

பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பளிகும் திட்டததுக்கு உதவி வழங்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

அரசாங்கத்தின் அனுசரணையுடன் தொழிற்பயிற்சி பெறும் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புக்களை பெற்றுக் கொடுக்குமாறும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

4 அமைச்சுக்கள் கூட்டாக இணைந்து மேற்கொள்ளப்பட்ட இத் திட்டத்தில் 10 ஆயிரம் பட்டதாரிகளுக்கு தனியார் துறைகளில் வேலை வாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

பயிற்சி பெறும் ஒவ்வொருபட்டதாரிக்கும் அரசாங்கத்தின் மூலம் 4 ஆயிரம் ரூபாவும், தனியார் நிறுவனத்தின் மூலம் 2 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

இவ்வாண்டு ஆயிரத்து 200 பட்டதாரிகளை வங்கிகளிலும், தனியார் நிறுவனங்களிலும் இணைத்துக் கொள்ள அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

வேலை வாய்ப்பின்மையை ஒழிக்கும் அரசாங்கத்தின் பிரதான திட்டத்துக்கு தேவையான உதவிகளை சில அமைச்சுக்கள் வழங்க தவறியதனாலேயே பிரதமரின் இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (தி)

## திணசரி தியானம்

### மயக்கம்

விட்டிற் பூச்சிகள் கொளுந்து விட்டெரியும் சுடரில் மயங்கி விழுவதும் மீன்கள் தூண்டிலில் உள்ள இரையைத் பற்றுவதும் அறியாமையினாலேயே பகுத்தறியும் நன்மை தீமைகளை அறியும் திறனுடைய மனிதன் பல்வேறு குறைகள் உடைய புலன இன்பங்களை ஒதுக்கித் தள்ளுவதில்லை. மயக்கத்தின் சக்திதான் எவ்வளவோ மர்மமாய் இருக்கின்றது.

சுவாமி சிவானந்தர்

# ஆங்கில ஆசிரியர்களுக்கு ஆயுள் காப்புறுதி வசதி

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் ஆங்கில ஆசிரியர்களுக்கு ஆயுள் காப்புறுதி வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான ஆரம்பகட்ட முயற்சிகளை அகில இலங்கை அரசினர் ஆசிரியர் சங்கம் மேற்கொண்டு வருகிறது.

இவ்விடயம் குறித்து ஆங்கில ஆசிரியர் சங்கத் தலைவர் எம்.ஏ. ஸ்டான்லின் பெரேரா இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனப் பொது முகாமையாளருடன் கலந்து பேசியுள்ளார்.

இலங்கைக காபபுறுதிக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து இத் திட்டத்தைச் செயற்படுத்துதல், ஆசிரியர்கள் அனைவரையும் இத் திட்டத்தில் கட்டாயப்படுத்திச் சேர்த்துக் கொள்ளல் 25 . சதவீத மாதாந்த செலுத்துகையை அரசு வழங்கல், மாதாந்த வேதனத்தில் இருந்து செலுத்துகை நீக்கப்படல் போன்ற விடயங்கள் குறித்து பொது முகாமையாளருடன் கலந்து ஆலோசிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

அதேவேளை, இவ்விடயங்களைச் செயற்படுத்தும் விதத்தில் கல்வி அமைச்சுக்கு அறிவிக்கவும் மேற்படி சங்கம் தீர்மானித்துள்ளது. (உ-18)

# ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட திட்டவரைபில் பல்வேறு முரண்பாடு

## முன்னாள் அமைச்சர் கதிர்காமர் தெரிவிக்கிறார்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கிற்கான இடைக் கால நிர்வாகம் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கும்



தனித்தனியே அனுப்பிவைத்துள்ள யோசனைகளில் பல்வேறுபட்ட முரண்பாடுகள் காணப்படுவதாக முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கதிர்காமர் கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

முறிவடைந்த நிலையில் உள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு விடுதலைப் புலிகள் கோரிய இடைக்கால நிர்வாகசபை தொடர்பான திட்டவரைபு ஒன்றை அரசாங்கம் கடந்த 17ஆம் திகதி வியாழக்கிழமை முன்னாள் நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் மூலம் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பியிருந்தது.

இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கும் அதன் பிரதி ஒன்று அரசாங்கத்தினால் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் விடுதலைப் புலிகளுக்கும் ஜனாதிபதிக்கும் அனுப்பிவைத்துள்ள இடைக்கால நிர்வாக சபை திட்டவரைபு யோசனைகளில் பாரிய வேறுபாடுகள் இருப்பதாக லக்ஷ்மன் கதிர்காமர் கண்டுபிடித்துள்ளார்.

அரசினால் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகசபை யோசனைகளில் 5 பந்திகளில் முகவுரை இருப்பதாகவும், 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள யோசனைகளில் அந்த ஐந்து முகவுரைகளும் இருக்கவில்லை என்றும் செய்தியாளர்களிடம் தெரிவித்த லக்ஷ்மன் கதிர்காமர் வடக்கு - கிழக்குப் பாதுகாப்பு காணி, வருமானம், பொலிஸ் ஆகிய விவகாரங்களில் உள்ள அதிகாரங்கள் தொடர்பாக ஜனாதிபதிக்கும், விடுதலைப் புலிகளுக்கும் அனுப்பிவைத்துள்ள யோசனைகளில் முரண்பாடு இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தற்போது தேசிய பிரச்சினைகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு வரும் இவ்வேளையில் இத்தகைய முரண்பாடுகள் கவலை அளிப்பதாகவும் லக்ஷ்மன் கதிர்காமர் பத்திரிகையாளர்களுக்கு விளக்கிக் கூறினார்.

(வ)

# கொழும்பில் சுற்றிவளைப்பு

## 142 பேர் கைதாகினர்

(யாழ்ப்பாணம்)

கொழும்புப் பகுதியல் நேற்று முன்தினம் காலை முதல் நேற்று காலை வரை நடத்தப்பட்ட திடீர் தேடுதலின்போது 142 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதே நேரத்தில் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து ரோநது நடவடிக்கைகளையும் வீதி மறிப்பையும் மேற்கொண்டிருந்தனர் என்று கொழும்புப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகம் அறிவித்துள்ளது.

(வ)

# ஈராக்கில் அமைதிப் படையாக அமெரிக்க - பிரிட்டிஷ் படைகளுடன் இலங்கைப் படையும் இணையும்

## அமைச்சர் மிலிந்த தீவிர முயற்சி

(கொழும்பு)

இலங்கைப் படையினரை, ஈராக்கில் நிலைகொண்டுள்ள அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் கூட்டுப் படைகளுடன் இணைத்து அமைதிப் படையாக ஈடுபடுத்துவதற்கு பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட அமெரிக்க உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



யாழ்ப்பாணத்தில் உள்ள உயர் பாதுகாப்பு வலயங்கள் குறைக்கப்பட்டால் ஏன்னைய பகுதியில் உள்ள படையினரின் தொகையின் அளவு அதிகரித்துவிடும்.

இதற்கு மாற்றுவழியாகவே உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் இருந்து விலக்கக்கூடிய படையினரை ஈராக்கில் அமைதிப் படையாக இணைத்துக்கொள்ள ஆலோசனை மேற்கொண்டு வருவதாக அரச தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கைப் படையினர் அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் கூட்டுப் படையுடன் இணைந்து செயற்பட்டால் அவர்கள் சர்வதேச தரத்திலான பயிற்சிகளைப்பெற முடியும் என அரச அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கைப் பொலிஸார் கிழக்குத் தீமோரில் உள்ள அமைதிப் படையுடன் செயற்பட்டு வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(ந-5)

## நோர்வே...

நோக்கமாகும் என்றும், இதற்காகத் தம்து அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருகிறது என்றும் இத் தூதுக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் கடந்த புதனன்று பௌத்தமதப் பீடாதிபதிகளைச் சந்தித்த பின்னர் இவர்கள் வியாழனன்று கண்டிக்குச் சென்றனர். இவர்களுடன் இங்கிலாந்து பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பௌத்தமதப் பேராசிரியரான தீகல மஹிந்த தேரர் மற்றும் நோர்வேக்கும் இலங்கைக்குமான பௌத்தமத சங்கத் தலைவர் திலக் பெரேராவும் இவர்களுடன் சென்றுள்ளார்.

(த)

## வடமராட்சி...

இடத்திற்குச் சென்ற கண்காணிப்புக் குழுவினர் படைத்தரப்பினருடன் பேச்சுக்களில் ஈடுபட்டனர்.

இதனை அடுத்து நேற்று மாலை 5 மணியளில் தமது முடிவை அறிவிப்பதாக படைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இருந்தபோதும் நேற்று மாலை வரை படையினர் தமது முயற்சிகளைத் தொடர்ந்தவண்ணம் இருந்ததாகத் தெரியவருகிறது.

(த)

## திட்டவரைபை...

புலிகளின் நிலைப்பாடு அறிவிக்கப்படுவதற்கு முன்னர் வெளியிடப்பட வேண்டும் என் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ கூறியதை ஜனாதிபதி அங்கீகரித்தார்.

திட்ட வரைபு குறித்து ஆராய்வதற்கு லக்ஷ்மன் கதிர்காமர் தலைமையில் நான்குபேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(த)

# சர்வதேச மன்னிப்புச்சபை கருத்துக்கூற மறுப்பு

(கொழும்பு)

இலங்கையில் நடைபெற்றுவரும் அரசியல படுகொலைகளுக்கு விடுதலை புலிகள் தான் காரணம் என்று கூறப்படுவது தொடர்பாக சர்வதேச மன்னிப்புச்சபை கருத்துக்கூற மறுத்துள்ளது.

அண்மைக் காலமாக இலங்கையில் நடைபெற்றுவரும் அரசியல்வாதிகளினதும் புலனாய்வுத் துறையினரதும் படுகொலைகளுக்கு விடுதலைப் புலிகள் காரணம் என்று கூறி சர்வதேச மன்னிப்புச் சபையிடம் கேள்வி தொடுத்த போதே சர்வதேச மன்னிப்புச்சபை கருத்துக் கூற மறுத்துள்ளது என்று இலங்கையில் இருந்து வெளிவரும் ''ஸ்ரீ லங்கா அக்கடமி'' என்ற இணையத் தளத்தின் செய்திகள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, சர்வதேச மன்னிப்புச்சபையின் பேச்சாளர் மிஸ்லோஸ்சனும் வடுதலைப் புலிகள் தொடர்ந்து இக்குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார்.

(வ)

## போராளி சாவடைந்தார்

(கிளிநொச்சி)

முல்லைத்தீவில் தவறுதலாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டின் போது போராளி ஒருவர் நேற்று முன்தினம் சாவடைந்துள்ளார்.

வீரவேங்கை புரட்சி மாறன் (செபமாலை அன்ரன் தியேஸ்வரன் மன்னார்) என்ற போராளியே சாவடைந்தவராவார்.

(ந-5)

## புலமைச் சொத்து சட்டமூலம் நிறைவேற்றம்

(கொழும்பு)

புலமைச் சொத்து சட்டமூலம் சில திருத்தங்களுடன் நேற்றுப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இச்சட்ட மூலத்திற்கு ஆதரவாக 99 வாக்குகளும் எதிராக 59வாக்குகளும் அளிக்கப்பட்டன.

பொதுஜன ஐக்கிய முன்னணி மற்றும் மக்கள் விடுதலை முன்னணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இச்சட்டமூலத்திற்கு எதிராக வாக்களித்தனர்

இச்சட்ட மூலம் 4 தடவைகள் பாராளுமன்றத்தில் விவாதத்திற்காக விடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(தி)

## திருநாள் திருப்பலி

(சுண்டுக்குளி)

பலாலி தெற்கு வயாவிளான் புனித யாகப்பர் ஆலயத் திருநாள திருப்பலி 13 வருடங்களின் பின்பு நாளை காலை 11 மணிக்கு ஆலய பங்கு தந்தை தலைமையில் ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.

உயர் பாதுகாப்பு வலயத்தினுள் இருக்கும் இத் தேவாலயத் திருப்பலி நிகழ்வுக்குச் செல்லவிரும்புவோர் நாளை காலை 10.00 மணிக்கு அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயத்தில் ஒன்றுகூடுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ந-5)

## குரங்குப்பாஞ்சான்...

பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைதுள்ளதாக கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

முகாமை அகற்றுவதற்கு விடுதலைப் புலிகள் மறுப்புத் தெரிவித்தமைக்குப் பதிலாகவே யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு இக் கடிதத்தைத் தமிழ்ச் செல்வனுக்கு அனுப்பிவைத்துள்ளது.

இது தொடர்பாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

குரங்குப்பாஞ்சான் முகாமை அகற்றுவதற்கு விடுதலைப் புலிகள் மறுப்புத் தெரிவித்திருந்தமை தொடர்பாக அரசுக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோவுடன் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் சுமார் இரண்டுமணி நேரம் வரையும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இதேவேளை, முகாம் அகற்றப் படாமையால் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலையைச் சீர்செய்யும் நோக்குடன் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் இவ்வார இறுதியில் நோர்வே செல்லவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம)

**பத்திரிகை விநியோகஸ்தர்கள் தேவை**

சொந்தமாக, நல்ல நிலையில் மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்கள் 27.07.2003 நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு வலம்புரி அலுவலகத்திற்கு நேரில் வரவும்.

குறிப்பு: வலம்புரி அலுவலகத்தில் இருந்து 5கிலோமீற்றர் தூரத்திற்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வலம்புரி ஆளணி முகாமையாளர்.

**MEDICAL CHECK UP**

**வைத்திய பரிசோதனை**

நோய் வருமுன் காப்போம்
திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்

- 40 வயதிற்கு மேற்பட்ட நோய் உள்ள, நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐச் செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்
- X-RAY- ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள் சிறுநீர்ப் பரிசோதனை.

இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP குறைந்த கட்டணத்தில்! விபரங்களுக்கு நேரில்!

போக்குவரத்து வசதி கருதி

**சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்**

(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)
ஆஸ்பததிரி வீதி, யாழப்பாணம்.

**பேருந்து உத்தியோகபூர்வ கையளிப்பு வைபவம்**

இரண்டாவது உலக இந்து மாநாட்டின் ஞாபகார்த்தமாக வடமராட்சிப் பாடசாலைகளின் தேவைகளுக்கும் பொதுவான இந்துசமய வளர்ச்சிப் பணிகளுக்கும் பயன்படுத்துவதற்காக கௌரவ இந்து கலாசார அமைச்சர் திரு. தி.மகேஸ்வரன் அவர்களால் வதிரி, கரவெட்டி ஸ்ரீ பரமானந்த ஆச்சிரமத்திற்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட 50இருக்கைகளைக் கொண்ட பேருந்து உத்தியோகபூர்வமாகக் கையளிக்கும் வைபவம் எதிர்வரும் 27.07.2003 ஞாயிறு காலை 9மணி முதல் 10 மணிவரையில் எமது ஆச்சிரமத்தில் நடைபெறும்.

வடமராட்சியில் உள்ள பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், இந்துசமய அமைப்புக்கள் - நிறுவனங்களைச சேர்ந்தவர்கள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வதிரி, தர்மகர்த்தாக்கள் சபை,
கரவெட்டி. ஸ்ரீ பரமானந்த சிறார்,
தொ.பே.இல. 021-2263136 முதியோர் இல்ல ஆச்சிரமம்

(C/6433)

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.07.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.